விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 01 வியாழக்கிழமை (15.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147

## சுவாமி சித்ரூபானந்தா தேகவியோகம் எய்தினார்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தின் நிறுவுனர் சுவாமி சித்ரூபானந்தா நேற்று மதியம் ஒரு மணியளவில் தேகவியோகம் அடைந்தார். அவருக்கு வயது 77.

வடமராட்சியைச் சேர்ந்த இராமலிங்கம்

20ஆம் பக்கம் பார்க்க....

# மே-18இல் உறவுகளை நினைவுகூருவர் தமிழர்

### கூட்டமைப்பு திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் உறவுகளைத் திட்டமிட்டுக் கொன்றுவிட்டு அதை போர் வெற்றி விழாவெனக் கொண்டாடும் ராஜபக்ஷ அரசு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வடக்கில் அனுஷ்டிப்பதற்குத் தடை விதிப்பது அடக்குமுறை ஆட்சியின் உச்சக்கட்டமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மாத்தறையில் பெருமெடுப்பில் போர் வெற்றி விழாவைக் கொண்டாடவுள்ள அரசும், அதன் படைகளும் வடக்கில் தமிழ் மக்கள் வீடுகளில் மாத்திரம் தமது உறவுகளை நினைவு கூர வேண்டாம் என்று கட்டளையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசும் அதன் படைகளும் எந்தத் தடைகளைப் போட்டாலும் அதனைத் தகர்த்தெறிந்து முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் மரணித்த தமது உறவுகளை மே 18 இல் தமிழ் மக்கள் நினைவு கூருவர் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிரோடிருக்கும் தமிழ் மக்களின மனதை நோகடிக்கும் விதத்திலும், தமக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது என்ற ஆணவத்துடனுமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையி லான சிங்கள இனம் போர் வெற்றி விழாவைக் கொண்டாடி வருகின்றது. இந்நிலையில், போரில் மரணித்த தமது பெற்றோர், பிள்ளைகள் மற்றும் உறவினர்களை பொது இடங்களில் நினைவு கூர அரசும், அதன படைகளும் தடைவிதித்துள்ளன. இது மிகவும் மோச

20ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அமைப்புக்கள் மீது தடை

# தடைக்கான ஆதாரங்களை கோருகிறது ஐரோ.ஒன்றியம்

(கொழும்பு)

*தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்று இலங்கை அரசு தனி நபர்களையும் புலம்பெயர் அமைப்புக்களையும் தடைசெய்துள்ள போதிலும் அதற்கான ஆதாரங்களை வெளியிடவில்லை.*

*அத்தகைய ஆதாரங்களை இலங்கை அரசிடம் இருந்து ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்க்கின்றது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டலி தெரிவித்துள்ளார்.*

இலங்கை அரசின் தடைப்பட்டியல் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமைப்பு ஒன்றைத் தடை செய்வது என்

20ஆம் பக்கம் பார்க்க....


## இலங்கையர் வாழ்வில் சித்திரவதை

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், சீனா உட்பட ஆசிய நாடுகளில், சித்திரவதை வாழ்வில் யதார்த்தமாக உள்ளதெனவும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

சித்திரவதை என்பது ஆசிய நாடுகளில் பரவலாக காணப்படுகின்றது. இந்த பிரச்சினை ஒரு சர்வாதிகார நாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. இது இந்த பிராந்தியம் முழுவதற்கும் உரியதாக உள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக்

20ஆம் பக்கம் பார்க்க....





யாழ்.பொது நூலகப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார மின்விளக்குகளை விருந்தினர்கள் ஒளிர வைப்பதனையும் மின் ஒளியில் அலங்கரிக்கப்பட்ட சிற்பம் ஒன்றையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)*

## விபத்தில் சிக்கிய சாரதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இர்ண்டு ஆட்டோக்கள் மோதிய விபத்தில் சிக்கிய சாரதி சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரிச்சந்தியில இடம்பெற்ற இந்த விபத்தில் சிக்கிய யாழ்ப்பாணம் டேவிட் வீதியினைச்சேர்ந்த ஆட்டோ சாரதியான பி.அன்ரனி (வயது-64) என்ப

20ஆம் பக்கம் பார்க்க....

## தமிழகத்திலுள்ள தம்பதியினரை கைது செய்ய இன்டர்போலின் உதவி

### சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை?

(சென்னை)

தமிழகத்திற்கு அகதியாகச் சென்ற இலங்கைத் தமிழர்கள் இருவரை கைது செய்ய, இன்டர்போல் பொலிஸாரின் உதவியை இலங்கை அரசாங்கம் நாடியிருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு பகுதியிலிருந்து கடந்த மே 5 ஆம் திகதி தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதிக்கு 2 தனித் தனிப் படகுகளில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 5 சிறுவர்கள் உட்பட 10 பேர் அகதிகளாகச் சென்றனர். இராணுவத்தினரால் எங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. இதனால் உயிர்ப் பிழைப்பதற்காகவே அகதிகளாக ராமேஸ்வரம் வந்தோம் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

முன்னதாக, அகதிகளாக வந்த கதிர்வேலு தயாபரராஜா மற்றும் அவரது மனைவி உதயகலா ஆகிய இருவரும் பல்வேறு பண மோசடியில் ஈடுபட்டதாக இலங்கையிலுள்ள

20ஆம் பக்கம் பார்க்க....

## ஒரே நாட்டிற்குள் இரண்டு கொண்டாட்டம்

### கஜதீபன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஒரு வீட்டுக்குள் வடக்கு அறையில் அழுகுரல்கள் கேட்கின்றன தெற்குஅறையில் வெற்றிக்கோஷங்கள் கேட்கின்றன. அப்படியாயின் அந்த வீட்டுக்குள் வடக்கும்- தெற்கும் ஒன்றாக இருக்க முடியுமா? அதிலும் வடக்கின் அழுகுரல்களுக்குக் காரணமாக இருந்த தெற்குப் பகுதியினரே. வடக்கின் சோகங்களை அனுஷ்டிக்க விடாமல், தமது வெற்றியை, கொண்டாட்டமாக அனுஷ்டிக்க வேண்டுமென நிர்ப்பந்தித்துக்கொண்டிருப்பது தான் இன்றைய நாட்டின் நிலைமை என வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன தெரிவித்தார்.

அதேவேள்ள புத்தரின் போதனைகளின படி அரசாங்கம் ஆட்சி புரிகிறதா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். நல்லூர் தெற்கு சனசமூகநிலை


20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உறவுகளின் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் உரிமை உண்டு

## அவைத் தலைவர் தெரிவிப்பு



உறவுகளை இழந்து கண்ணீர் சிந்தும் எங்களுக்கு, முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை அனுஷ்டிக்கும் உரிமையுண்டு என வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெற்ற இயல், இசை, நாடக விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், எந்த சட்டத்தாலும் அடக்குமுறையாலும் ஒரு மனிதனின் தோன்றாப்பொருளாக இருக்கும் உள்ளுணர்வைக் கட்டுப்படுத்த முடியாது என்றார்.

தமிழ்த் தேசிய மக்களின் உணர்வுகளும் அபிலாஷைகளும் எதிர்பார்ப்புக்களும் நிறைந்த யாழ். பல்கலைக்கழகம், இன்று அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது.

அதாவது எமது உணர்வுகள் ஒன்றுகூடக்கூடிய ஒரு கட்டமைப்பு திட்டமிட்டு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாளில் வரவிருக்கும் இரங்கல் நிகழ்வு தடுக்கப்பட்டுள்ளது.

நம் சமூகத்தில் உள்ள எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இந்த மே மாதத்தில் பாதிக்கப்பட்டுள்ளோம். தனிப்பட்ட ரீதியில் எனது குடும்பம் கூட பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

வட மாகாணத்தில், தேசிய வீரர்கள் தினம் கொண்டாடப்பட்டது. ஆனால் உயிர் நீத்த எம் உறவுகளுக்காக கண்ணீர் விடவோ நினைவு கூரவோ முடியாமல் உள்ளோம். என்றாலும் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் எமது உணர்வுகளை வெளிக்காட்டவே செய்வோம்.

இனிமேல் நாம் தலைநிமிர்ந்து நிற்கும் காலம் ஆரம்பமாகிவிட்டது என நான் நினைக்கிறேன். கலை, கலாசாரம் மூலமாக எம் பண்பாடுகள் விழுமியங்கள் மீண்டும் மிளிர ஆரம்பித்துள்ளதை நான் பார்க்கிறேன்.

எம்மண் வன்முறை உணர்வாகப் பார்க்கப்படுகின்றது. இதனை நீக்கவும் எம்மைக் காத்துக்கொள்ளவும் இளைஞர்கள் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## நாவலடியில் இளைஞனின் சடலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி கடற்கரையில் நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மட்டக்களப்பு தனியார் வங்கியொன்றில் காசாளராக கடமை புரியும் வவுனியாவைச் சேர்ந்த எம்.லதீஸன (வயது-23) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரின் மரணம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-8)

## தானம் உண்ட 50 பேர் சுகவீனம்

(கொழும்பு)

மாத்தறை, தெனியாய, தியதாவ விகாரையில் காலை மற்றும் பகல் தானங்களை உட்கொண்ட 50பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெனியாய வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

வெசாக் பௌர்ணமி தினமான நேற்று விகாரைகளில் சில் புண்ணிய நிகழ்வில் பக்தர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கான உணவுகள் விகாரைகளிலேயே தானமாக வழங்கப்படுவது வழக்கம்.

இவ்வாறாக, தியதாவ விகாரையில் சில் புண்ணிய நிகழ்வில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு வழங்கப்பட்ட உணவு விஷமாகியதை அடுத்தே 50பேர் சுகவீனமுற்றுள்ளனர். (எ-8)

## மரண அறிவித்தல்

### வண.சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

பருத்தித்துறை



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் வண.சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் நேற்று (14.05.2014) இறையடி சேர்ந்தார். சுவாமிகளின் இறுதிக் கிரியைகள் இன்று 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆச்சிரமத்தில் நடைபெறுமென்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

**ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.** (சி-7368)

தகவல்: ஆ.நவரத்தினராசா


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்புடையீர்!

கடந்த 16.04.2014 புதன் கிழமை அன்று சிவபதமடைந்த

அமரர் **தம்பையா ஐயாத்துரை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.05.2014) வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை. (சி-7369)

இங்ஙனம் குடும்பத்தினர்

## விற்பனைக்கு உண்டு

மகேந்திரா MAXIMO Plus

0778202966

(6386)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 321 0815 021 567 1532

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7363)

## சஷ்டியப்த பூர்த்தி

(60வது திருமண நாள்)

2014.05.15 முருகேசு – வரதநாயகி



நாட்டுக்கு பெருமை சேர்த்து நாணயமாய் வாழ்ந்திடவே
வீட்டுக்குள் விரிசல் இன்றி கூட்டுறவாய் வாழ்ந்திடவே
ஊருக்கு உவமை சேர்த்து உன்னதமாய் உயர்ந்திடவும்
பலநூறு பல்லாண்டு பலரோடு வாழ...
இந்நாளில் வாழ்த்துகின்றோம்

கற்குளம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (6383)

வாழ்த்துவோர்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் (ஜெயநாயகம் சிந்துஜன்)

## சேவைக்குக் கிடைத்த வெற்றிக்கு எங்கள் வாழ்த்துக்கள்



வைத்திய கலாநிதி **வை.தியாகராஜா**

கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் சர்வதேச லயன் கழகங்களின் 306 B1ற்கான மகாநாடு கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றபோது உப ஆளுநர் பதவிக்கான தேர்தலில் அமோக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டி சாதனை படைத்த வைத்திய கலாநிதி வை.தியாகராஜா அவர்களைப் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (6385)

**பொ.சிவலிங்கம் குடும்பம்** (முன்னாள் அச்சுவேலி கிராமசபை உறுப்பினர்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் 3 ஆம் கட்டப்பேச்சு மக்களவை தேர்தலின் பின்னர்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் எந்தவிதமான உடன்பாடும் எட்டாத நிலையில், மூன்றாம்கட்டப் பேச்சுவார்த்தை மக்களவைத் தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் நடைபெறும் என தமிழக மீனவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தமிழக - இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள ஹரிட்டாஸ் அரங்கத்தில், தமிழக மற்றும் இலங்கை மீனவப் பிரதிநிதிகளின் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை, இருநாட்டு மீன்துறை அதிகாரிகள் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இதில், தமிழக விசைப்படகு மீனவர்கள் தடை செய்யப்பட்ட வாருதல் (trawling) மீன்பிடி மற்றும் இரட்டைமடி போன்ற மீன்பிடி முறைகளை பயன்படுத்தி, இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதை முற்றிலுமாகக் கைவிட வேண்டுமென இலங்கை தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால், இந்த மீன்பிடி முறையை மாற்றிக் கொள்ள மூன்று வருட காலம் அவகாசம் வேண்டும். அதே நேரம் இலங்கை கடற்பரப்பில் ஆண்டுக்கு 120 நாட்களுக்கு தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு பதிலாக 90 நாட்களாக குறைத்துக்கொள்கிறோம் என தமிழக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதனை இலங்கை பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர்.

மேலும், இலங்கையில் 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் கடல் வளங்களை, தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து அழித்து வாழ்வாதாரத்தை நாசமாக்குவதாகவும் குற்றம் சாட்டினர்.

அதேசமயம், பாரம்பரியமாக இருநாட்டு மீனவர்களும் மீன்பிடித்து வந்த கடற்பரப்பில், தாங்கள் தொழில் செய்யும் உரிமையை இலங்கை மீனவர்கள் மறுக்கக் கூடாது எனவும் தமிழக மீனவர்கள் வாதிட்டனர்.

மீனவர் பேச்சுவார்த்தை குறித்து செய்தியாளரிடம் கொழும்பில் உள்ள தமிழக மீனவப் பிரதிநிதிகள் கூறியபோது, "கொழும்பில் நடைபெற்ற இரண்டாம் கட்ட மீனவப் பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாட்டினை எட்ட முடியாமல் போனது.

இதனைத் தொடர்ந்து, மூன்றாம்கட்டப் பேச்சுவார்த்தை எங்கு, எப்போது நடக்கும் என்பது குறித்து 10 நாட்களுக்குள் அதாவது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் அறிவிக்கப்படும்" என தெரிவித்தனர். (அ)

## கட்டடக்கலை வரலாற்றாசிரியர் அனோமா பீரிசின் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் நான்காவது நிகழ்வு இன்று மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை இல. 199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் கட்டடக் கலை , கட்டடம் மற்றும் திட்டமிடல் பீடத்தின் உதவிப் பேராசிரியராக பணியாற்றும் அனோமா பீரிஸ் இலங்கை கட்டடக் கலை உருவாக்கத்தில் காலனிய வட்டார மற்றும் பிராந்திய அடையாளங்கள் எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முகாமையாளர் தி.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (அ)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# இலங்கை கடற்பரப்பில் இழுவைப் படகில் மீன்பிடி

## அனுமதி கோருகின்றனர் தமிழக மீனவர்கள்

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு(தமிழக) இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில், தமது தொழிலை மேற்கொள்ள இந்திய அரசாங்கத்தின் தலையீடு தேவை என்று இந்திய மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என இந்திய செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் இழுவைப்படகுகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்தக்கூடாது என்று இலங்கையின் வடபகுதி மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதும் இது தொடர்பிலேயே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இந்தநிலையில் இழுவைப்படகுகளில் தமது மீன்பிடியை மேற்கொள்ள இந்திய அரசாங்கம் உதவ வேண்டும் என்று இந்திய மீனவர்கள் கோரியுள்ளனர்.

காமராஜர் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போது இழுவைப்படகு மூலம் மீன்பிடி முக்கிய பொறிமுறையாக இருந்து வந்தது. பின்னர் அது கொட்டன் வலையாகவும் நைலோன் வலையாகவும் மாற்றம் பெற்றது.

இந்தநிலையில் இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடும் போதே அதிக மீன்களை பிடிக்க முடியும். இல்லையேல் மீன் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தை இழக்கநேரிடும் என்று தமிழக மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இழுவைப்படகுகளில் மீன்பிடியில் ஈடுபடும் போது இந்திய கடலில் மீன்கள் இருப்பதில்லை. இலங்கை கடற்பரப்பிலேயே மீன்கள் அதிகமாகவுள்ளன. எனவே தான் அந்தக் கடல் பகுதிக்கு செல்லவேண்டியுள்ளதாக இந்திய மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ)

## சமூக விஞ்ஞான படிப்பு வட்டக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நடத்தும் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி செயற்றிறன் இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இன்றைய சமூகப் பிறழ்வுகளும் சமூகப் பொருளாதாரக் காரணிகளும் என்ற தலைப்பில் தொடக்கவுரையை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சிவகரனும் கருத்துரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் ஆற்றவுள்ளனர்.

இக்கருத்துரையை தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (அ)

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



ஸ்ரீமான் உயர் திரு.
பொன்னம்பலம்
ரட்ணசிங்கம்
(வடமராட்சி வலயக்
கல்விப் பணிப்பாளர், சிவபாதம்
நந்தகுமார் அவர்களின்
அன்பு மாமனார்)

(6358)

வல்லமை நிறைந்த அன்பர் இறைபதம் அடைந்து ஆத்மா சாந்தி பெறவும் அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு நாம் வணங்கும் எம் அன்னை ஸ்ரீ நெல்லண்டைப் பத்திரகாளி, ஸ்ரீவீரமாகாளி, வைபத்திரகாளியம்மன் திருவருள் நல்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றேன்.

சிவ ஸ்ரீ.தியாக.
சோமஸ்கந்தராஜக் குருக்கள்,
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன்
பிரதம குருவும் ஆதீனகர்த்தவும்.

நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை.

# இராசி பலன்

**15.05.2014**

(வைகாசி 01, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
பிரதமை முன்னிரவு 11.49 மணிவரை
விசாகம் முற்பகல் 7.17 மணிவரை
இராகுகாலம் 11.23-2.53 மணிவரை
சுபநேரம் 7.23-8.53 மணிவரை

வளவன்

**மேடம்:** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பகைவர்கள் விலகுவர், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்:** தொழிலில் புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலன் கருதிய சில செலவுகள் ஏற்படலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** தாயின் உடல் நலம் சீராகும், வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பயந்த சுபாவமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்குமேன்மையுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், சர்ப்ப பிரயாசைகள் கூடும்.

**தனுசு:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்கால நலன்கருதி புதிய திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டுவீர்கள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபருக்கு கடூழிய சிறைத்தண்டனை


நீதிமன்றத்தில் 13 வழக்குகளுக்கு ஆஜரா காமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை 13 வழக் குகளும் முடியும் வரையிலும் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மல்லா கம் நீதவான் நீதிமன்ற மேல திக நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா உத்தரவிட்டுள்ளார்.




சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த பேருந்து சாரதிக்கே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

தலைமறைவாகியிருந்த மேற்படி நபர் நேற்றுமுன்தினம் ஓமந்தைப் பகுதியில்வைத்து கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸா ரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

இந்நபருக்கு எதிராக பேருந்தின் இலக்க த்தகட்டை மாற்றிமாற்றி செலு த்தியமை, அனு மதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, பிறி தொரு நபரின் அனுமதிப்பத்திரத் தில் வாகனம் செலுத்தியமை, மது போதையில் வாகனம் செலுத்தி யமை, போக்குவரத்துப் பொலிஸாரின் கடமைகளைச் செய்ய விடாமை, நீதிமன்றத்தினை அவமதித்தமை உள்ளிட்ட 13 வழக்குகள் தொடரப் பட்டு மல்லாகம் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்ப ட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)




# உடுவில் உப அலுவலகம் தற்காலிக இடமாற்றம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை யின் உப அலுவலகம் தற்காலிக மாக பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றப்பட வுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஸ் அறிவித்துள்ளார்.

இதற்கமையமருதனார்மடச்சந்தை தொகுதியின் கட்ட நிர்மாணப் பணி கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் சந் தைத் தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இயங்கி வந்த உப அலுவ லகமே இவ்வாறு மாற்றப்படவுள்ளது.

இது எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட் கிழமை தொடக்கம் நடை முறைக்கு வருகின்றது.

ஆயினும் உடுவில் உப அலுவல கத்துடன் இயங்கி வந்த ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் பொது நூலகம் ஆகியன தொடர்ந்தும் முன் னர் இருந்த இடத்திலேயே இயங் கும் எனவும் இவற்றுக்கு செல்வ தற்கு இதன் மேற்குப்பக்கமாகவு ள்ள சிங்கத்தின் கலட்டி வீதியூடாக செல்ல முடியும் எனவும் அறிவி க்கப்பட்டுள்ளது.

சந்தையின் உட்புறத்தே வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலுள்ள மரக்கறி மற்றும் பலசரக்கு வியாபார இடங்களும் சந்தையின் தெற்குப்ப குதிக்கு தற்காலிகமாக இடமாற்றப் படவுள்ளதாகவும் மேலும் தெரிவித் துள்ளார். (அ-23)

# குமாரர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(கொழும்புத்துறை)

திரம்ன குமாரிகள் இராஜயோக நிலைய குமாரர்களுக்கான இரு நாட்கள் பயிற்சிப்பட்டறை நேற்றும் இன்றும் பலாலி வீதியிலுள்ள கோண் டாவில் நிலைய மண்டபத்தில் நடை பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று வியாழக் கிழமை அதிகாலை 3 மணி தொட க்கம் இரவு 10 மணி வரை நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நேற்றைய தினம் பங்கு கொண்ட யாழ்ப்பாணம் உட் பட முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் உள்ள இளையோர் களும் பங்கு கொள்ளலாம் என மேற்படி நிலையம் அறிவுறுத்தியுள் ளது. (அ-51)

# இயல், இசை, நாடக விழாவின் மூன்றாம்நாள் நிகழ்வுகள்

இலங்கை வேந்தன் கலைக் கல் லூரி நடத்தும் இயல், இசை, நாடக விழா யாழ்ப்பாணம் கல்லூரி வீதி, நீராவியடி எனும் முகவரியில் அமை ந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் 5 நாட் கள் செந்தமிழ் சொல்லருவி ச.லலீ சன் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப் பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.க.கணபதிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

மங்கள இசையுடன் ஆரம்பமா கும் இந் நிகழ்வின் ஆசியுரையை யாழ்.ஶ்ரீநாக விகாரை வண.கலை மாணி மீகஹஜந்துரே சிறிவிமல தேரர் வழங்குவார்.

அதனைத் தொடர்ந்து அராலி யூர் ந.சுந்தரம்பிள்ளை வாழ்த்து ரையை நிகழ்த்துவார்.

சைவச் சிறுவர் இல்ல மாணவ மாணவிகள் வழங்கும் யோகக்கலை நிகழ்வும் தொடர்ந்து குரலிசையும் பரத கலாகேந்திரம் மாணவிகள் வழங்கும்நாட்டியாஞ்சலியும்லி.அனி ருத்திரனின் மாணவர்கள் வழங்கும் கிண்கிணி நாதமும், தொடர்ந்து கலை வேந்தன் ம.தைரியநாதன் குழுவி னர் வழங்கும்மயான காண்டம் இசை நாடகமும் இடம் பெறும். (அ)

# திருமணம் செய்வதாக கூறி பணமோசடி செய்த சந்தேக நபர் ஆட்பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சிலாபம் பகுதியைச்சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்வதா கககூறி 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணமோசடி செய்த வல்வெட் டித்துறையைச் சேர்ந்த நபரை அதே பெறு மதியிலான இரண்டு ஆட்பி ணையில் விடு வித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கே.கஜ நிதிபாலன் மேற்படி நபரை சிலாபம் நீதிமன்றில் ஆஜராகும்படியும் உத்த ரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் சிலாபத்தைச் சேர்ந்த பெண்ணொருவரை திரு மணம் செய்வதாகக் கூறி அவரிட மிருந்து 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பணம் மோசடி செய்துவிட்டு வல்வெட்டித்துறைக்கு தப்பிவந்து விட் டார்.

இந்நிலையில் குறித்த பெண் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததுடன் சிலாபம் பொலிஸார் வல்வெட்டி த்துறைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த நபர் வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்து நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித் தார். (அ-4)

# அச்சுவேலி தெற்கு பிரதேசத்தில் நான்கு ஏக்கர் காணி சுவீகரிப்பு

யாழ்.வலிகாமம் கிழக்குப் பிர தேசத்திற்குட்பட்ட ஜே-285 அச்சு வேலி தெற்குப் பிரதேசத்தில் 4 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்ப டவுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

9 தனிநபர்களுக்கு சொந்த மான 2 ஏக்கர் காணியும் அச்சு வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான 2 ஏக்கர் காணியுமே இவ்வாறு சுவீகரிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காணியானது 5 ஆவது காலாற்படை பெரும்பகுதி தலை மைக் காரியாலயம் அமைப்பத ற்காக சுவீகரிக்கப்படுவதாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி அபிவிருத்தி அமை ச்சின் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி கொள்ளும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) கீழ் பொதுத் தேவையொன்றிற்காக இந்தக் காணி சுவீகரிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காணி அமைந்துள்ள கிராம அலுவலரின் அலுவலக த்தில் இவ் அறிவித்தல் ஒட்டப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வலி.வடக்கில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப பட்ட காணிகளின் உரிமையாளர்க ளுக்கு வளலாய்ப் (வலி.கிழக்கு) பகுதியில் மாற்றும் காணிகள் வழங்கப்பட்டு, அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடு க்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இதற்காக வளலாயில் குடியேற வுள்ள மக்களின், வலி.வடக்கு ஆக்கிரமிப்பு பகுதிகளிலுள்ள காணி களை அளவீடு செய்யும் நடவடிக் கைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அளவீடுகள் செய்யப் பட்டதும் அதற்குரிய நட்டஈடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு, அவர்கள் வளலாய்ப் பகுதிகளில் மீளக்குடிய மர்த்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அவர்களுக்கு சகல வசதிகளுடன் கூடிய மாதிரிக் கிரா மம் அமைக்கும் வேலைத்திட்டங் களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)




யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடகவிழா நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமானது. இந்நிகழ்வில் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கலைஞர்களை கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ஆர்.கரன், மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை சர்வமத குழு யாழ்ப்பாணம் வருகை தரும்

(கொழும்புத்துறை)

தென்னிலங்கை சர்வமதத் குழுவினர் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 25,26 ஆம் திகதிகளில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறும்.

சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான நல்லிணக்கத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி நிகழ்வில் காலி, அம்பாந்தோட்டை, ஹற்றன், அநுராதபுரம், கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்தும் சர்மத் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் கொழும்புத்துறை, நாவாந் துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களுடன் நற்புறவான ரீதியில் கலந்துரையா டவுள்ளனர்.

தொடர்ந்து யாழ். மாவட்டத்தின் ஏனைய இடங்களையும் சென்று பார்வையிடவுள்ளனர். யாழ். மாவட்ட உண்மை நிலைமைகளை அறிந்து கொள்ளவும் இனங்களுக்கு இடையிலான நட்புறவையும் சர்வ மத குழுவினர்களுடனான பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் நோக்குடனும் இக்குழுவினரின் விஜயம் இடம்பெறவுள்ளது. (அ-51)

# யுத்த வெற்றி கொண்டாட்டத்திற்கு த.தே.கூட்டமைப்புக்கும் அழைப்பு

(கொழும்பு)

மஹிந்த அரசின் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷவே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

தமிழ் உறவுகளைக்கொத்துக் கொத்தாகக் கொன்றுவிட்டு அரசு நடத்தும் இந்த யுத்த வெற்றிவிழாக் கொண்டாட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பங்கேற்க மாட்டார்கள் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பினருக்கு கோத்தபாய ராஜ பக்ஷவினால் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள - மும்மொழிகளிலான அழைப்பிதழில் சுதந்திர நாட்டின் உரிமையை, சுதந்திர தேசத்தின் அழகினை, சுதந்திர உள்ளத்தின் மகிமையை இலங்கை நாட்டின் இளைய தலைமுறையினருக்கு மீட்டுத் தந்த வெற்றித் தருணத்தின் தளபதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு வரலாற்று சிறப்பு மிக்க மாத்தறை நகருக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (அ)

# புலம்பெயர் அமைப்புக்கள் மீது தடை ஆதாரம் கோருகிறது பிரிட்டன்

புலம்யெர் அமைப்புக்களும், தனிப்பட்ட நபர்களும் இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டமைக்கு பிரித்தானியா எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கு வெளியே இயங்கி வரும் புலம்யெர் அமைப்புக்கள் சிலவற்றையும், தனிப்பட்ட நபர்களையும் தடை செய்துள்ளமை குறித்து பிரித்தானியா கவனம் செலுத்தி வருவதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஹூகோஸ்வாயார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய அமைப்புக்கள் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் உரிமை தொடர்பில் மாற்றுக் கருத்து கிடையாது.

தெளிவான ஆதாரங்கள் இருக்கும் இடத்தில் இவ்வாறு தடை விதிப்பதில் பிரச்சினை இல்லை.

எனினும், கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் இவ்வாறான தடைகள் பிறப்பிக்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு அமைப்புக்களுக்கு தடை விதிப்பது பொருத்தமாகாது. இவ்வாறான நடவடிக்கைகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழியமைக்காது.

மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள் மீது தொடர்ந்தும் இலங்கையில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து பிரித்தானியா பல தடவைகள் இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது என்றார். (அ)

# நீரிழிவுநோய் காணப்படும் பகுதிகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்குங்கள்

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க விசேட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டுக்குள் முன்னேற்றகரமான நீர் விநியோகத்தை ஏற்படுத்த திட்டமிட்ட வேலைத் திட்டங்களை செயற்படுத்துமாறும் அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடத்திய சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் அமைக்கப்பட்டு வரும் நீர் வழங்கல் திட்டங்களில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து இச்சந்திப்பின் போது கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)


**இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக விழா-2014**

தலைவர்
செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்

**15.05.2014 மூன்றாம் நாள்**

**(63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்)**

நேரம்- பி.ப. 4 மணி

**பிரதம விருந்தினர்**
திரு.வே.க.கணபதிப்பிள்ளை (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

✝ நாச்சிமார் கோவிலடி "பிரபா" குழுவினர் வழங்கும்
**மங்கல இசை**

*நாதஸ்வரம்*
★ திரு. சி.பிரபாகரன்
★ திரு. ச.சந்திரகுமார்

*தவில்*
★ திரு.ச.கரி
★ திரு.கு.கோகுலன்

✝ மங்கல விளக்கேற்றல்
✝ தேவாரம்: செல்வி. பிரியங்கா இராசலிங்கம்
✝ ஆசியுரை: வண. கலைமாணி மீகஹஜந்துரே சிறி விமல தேரர் (ஸ்ரீநாக விகாரை-யாழ்ப்பாணம்)
✝ வாழ்த்துரை:- திரு. அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை
✝ சைவச் சிறுவர் இல்ல மாணவ, மாணவிகள் வழங்கும்
**யோகக்கலை**

*குரலிசை*
*பாட்டு :* திரு.தவநாதன் றொபேட்
*வயலின்:* திரு. அ.ஜெயராமன்
*மிருதங்கம்:* திரு.க.கஜன்
*கடம்:* திரு. நா. மாதவன்
*கஞ்சிரா:* திரு. நா. சிவசுந்தர்
*முகர்சிங்:* திரு.சி.செந்தூரன்
*தம்புரா:* திரு.க.ரஜீவன்

✝ "பரத கலாகேந்திரம்" மாணவிகள் வழங்கும்
**நாட்டியாஞ்சலி**
*நட்டுவாங்கம்:* திருமதி வசந்தி குஞ்சிதபாதம்
*பாட்டு:* திரு. சி.விபிஷன்
*வயலின்:* திரு. அ.ஜெயராமன்
*மிருதங்கம்:* திரு. க.நந்தகுமார்

✝ லி.அனிருத்திரனின் மாணவர்கள் வழங்கும்
**கிண்கிணி நாதம்**
*நட்டுவாங்கம்:* திரு.லிங்கராஜா அனிருத்தன்
*பாட்டு:* திரு. சி.விபிஷன்
*வயலின்:* திரு. அ.ஜெயராமன்
*மிருதங்கம்:* திரு. G.கண்ணதாஸ்

✝ கலைஞர்கள் கௌரவிப்பு
✝ பிரதம விருந்தினர் உரை
✝ கலைவேந்தன் ம.தைரியநாதன் குழுவினர் வழங்கும்
**மயான காண்டம் (இசை நாடகம்)**
✝ நன்றியுரை

(6379)

**அனுசரணை: அருந்ததி விநியோகஸ்தர்கள், 87, பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P. 0779237751**



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா: 33.25 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 180 cm<br>தகைமை/தொழில்: மிசனறி பொறியியலாளர் (ஜேர்மனி சிற்றிசன்)<br>தொ.இ: B/3116 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 76 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: சித்த வைத்தியம்<br>தொ.இ: G/3106 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 3.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3117 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 56.75 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/3107 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 30.5 செவ் 1 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: MBBA / வைத்தியர்<br>தொ.இ: B/3121 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 45 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / தாதியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/3109 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 9.75 உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம், மொழி பெயர்ப்பாளர் (பிரான்ஸ்)<br>தொ.இ: B/3122 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 61 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: CIMA / கணக்காளர்<br>தொ.இ: G/3112 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது எதிர்க்கட்சி வேட்பாளருக்கு அனுரகுமாரவே பொருத்தமானவர்

## தயான் ஜயதிலக்க கட்டுரையில் சுட்டிக்காட்டு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட, பொதுவேட்பாளராக ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவை தெரிவு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக்க தமது கட்டுரை ஒன்றில் முன்வைத்துள்ளார்.

,எதிர்வரும் 2015 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2016 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற போதிலும் அதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடத்த மஹிந்த ராஜபக்ச ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் இருந்து வரும் ஆதரவு குறைந்து வருகிறது. இதனை சரி செய்வதற்கு தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அரசாங்கத்திடம் திட்டம் எதுவும் இல்லை.

எனவே ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் அதில் பெறப்படும் வெற்றியை கொண்டு அடுத்த நாடாளுமன்ற தேர்தலிலும் வெற்றிபெற முடியும் என்று ஜனாதிபதி எண்ணம் கொண்டிருப்பதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி தேர்தல் முதலிலேயே நடத்தப்படவுள்ளதாக தெரிகின்றது.

புதுப்பிக்கப்பட்ட ஜே.வி.பியின் புதிய இளம் தலைவராக பொறுப்பேற்றுள்ள அனுரகுமார திஸாநாயக்க, லத்தீன் அமெரிக்காவில் செயற்பட்ட புரட்சிகர குழுவின் சிந்தனைகளை தோற்றுவிக்க முடியும் என்று மேற்படி கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை பொறுத்தவரை முதலாளித்துவ ஆட்சிமுறை இடதுசாரி ஆட்சி முறைக்கு மாற்றம் பெற வேண்டும். இதன்போதே அழிந்துக் கொண்டிருக்கும் நாட்டை சீரமைக்க முடியும் என்றும் அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் கண் சத்திர சிகிச்சைக்கென சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு முப்பத்தையாயிரம் ரூபா பணத்தை வழங்கியது. இப்பணத்தை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஜெ.லக்ஸ்மன் வழங்குவதை படத்தில் காணலாம்.

# நாட்டை பிரிக்க நினைப்போர் மனம் திரும்புவார்கள்-கெஹலிய

அரசாங்கத்தின் கொள்கைகள் மீது விருப்பம் இல்லாதவர்களும், நாட்டை பிரிக்க நினைக்கின்றவர்களும், மனம் திரும்புவார்கள் என்று நம்புவதாக கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளை பாதுகாப்பதற்காக சில நாடுகள் சில குழுக்களை தூது அனுப்பின. சில நாடுகள் கப்பல்களை கூட அனுப்ப தயாராக இருந்தன.

ஆனால் ஜனாதிபதி இந்த அழுத்தங்களை புறந்தள்ளி யுத்தத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார்.

தற்போது யுத்தம் நிறைவடைந்த பின்னர் தத்தமது விருப்பங்களுக்கு எதிராக ஜனாதிபதி செயற்பட்டமையால், அந்த நாடுகள் தற்போது இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றன என்றார். (அ)

# எச்சரிக்கை அறிவித்தலுக்காக பாடுபடுவேன்-மைத்திரிபால

(கொழும்பு)

பொதுமக்களின் நலன்கருதி சிகரெட் பக்கெட்டுக்களில் 80 வீத எச்சரிக்கை அறிவித்தல்களை காட்சிப்படுத்த பாடுபடப்போவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக சில ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

. ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சிகரெட் பக்கெட்டுக்களில் 80 வீதமான எச்சரிக்கை அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது.

எனினும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சிகரெட் தயாரிப்பு நிறுவனத்தின் மனு ஒன்றின் மீதான விசாரணையின் போது இதனை 20 வீதத்தால் குறைத்துள்ளது.

இது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. எனவே மீண்டும் சிகரெட் பக்கெட்டுக்களில் 80 வீத எச்சரிக்கையை காட்சிப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 120 |
| தக்காளி | 120 | 140 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 40 |
| கோவா | 60 | 50 | 50 | 60 |
| கரட் | 80 | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 | 60 |
| புடோல் | 60 | 50 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 100 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 160 | 120 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 50 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 120 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 40 | 50 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 140 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 40 | 30-35 |
| இராசவள்ளி | 70 | 120 | 100 | 80 |

# ஹெரோயினுடன் பெண்கள் கைது

பொரளை பொலிஸ் பிரிவில் மகசின் வீதி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த இரு பெண்கள சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்களிடம் இருந்து 8 கிராம் 670 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

39 மற்றும் 40 வயதுடைய பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று மாளிகாந்த நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இலங்கையில் புதிய கொள்கை வகுப்பு இன்று அவசியமானது

## அனுரகுமார எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் சிங்கள் மற்றும் தமிழ் இனவாதத்தை தாம் நிராகரிப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் புதிய ஒரு கொள்கை வகுப்பு இன்று அவசியமாகிறது.

இதன்மூலமே அழிந்துப்போய்க் கொண்டிருக்கும் நாட்டை மீளக் கட்டியெழுப்பமுடியும்.

இந்நிலையில் தமிழ் மற்றும் சிங்கள இனவாதத்தை ஊக்குவிப்பதை நிறுத்த வேண்டும்.

இனவாதத்தை ஊக்குவிப்பதால் மற்றும் ஒரு இனவாதம் தலைதூக்குகிறது. இதனை கட்டுப்படுத்தும் போதே நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

இதேவேளை இனவாதத்தை தோற்கடித்தால் மாத்திரம் ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியும் என்றும நினைப்பதும் பொருத்த மற்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (14)

மயூன் கங்காதரன்




விருபா விரு




துவா தயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டெண் 03 இன் பலன்கள்

**02**

### தோற்றம்

சூரியனில் குரு பகவானுடைய பலன் சேருவதிது. நீல்ல உயரமும் செந்நிறமும் இருக்கும். தலை முடி சுருட்டையாகவும் கருகருவென்றும் அமைந்திருக்கும. புருவங்களும் நன்கு நிண்டு வளைந்திருக்கும். முன் பற்கள் இரண்டு பெரிதாக இருக்கும். முகம் உருண்டையாக மேல் நெற்றி மேடாக இருக்கும் கை கால்கள் விரல்கள் நீண்டும் கழுத்து குட்டையாகவுமிருக்கும். கண்கள் சற்று உள்ளடங்கிக் காணப்படும். பார்வைக்கு அழகாக இருப்பார்.

### குணம்

அழகாக ஆணித்தரமாக பேசுவர். அளவாக பேசும் இவர்கள் யோசனை இலாபகரமாக அமையும். பிறருக்கே நன்கு அவை பயன்படும். பல நண்பர் இவரை நாயகமாக வைத்தே கூடி பழகுவர். தன் தனித்தன்மை விடாமல் பலருடன் ஏற்றாற்போல பழகும் இவர்கள் சண்டைக்காரரல்லர். தீய வழக்கங்களிலிருந்து விலகியே இருப்பார்.

அழ்ந்த சிந்தனை இருக்கும். ஆத்திரம் எளிதில் எழும். வெளிப்படையாக எதையும் கூறமாட்டார். பிறரை எடைப் போட்டு புரிந்து கொண்டு பழகுவர். காதலிப்பர். சோம்பலின்றி வேலை செய்வர். பயனுடையதா எனப் பார்க்க மாட்டார்.


மெதுவாக நடப்பதும் பேசுவதும் இவரின் இயல்பு. மனித நேயத்தை- உறவைக் காப்பாற்ற அறியமாட்டார். புகழில் ஆசையிருக்கும். குடும்பப் பாசம் சகோதர சகோதரிகளிடம் பற்று இருக்கும். சுயநலமுண்டு. வெற்றியை விரும்புவர். சிக்கனமாகச் செலவு செய்வர். எதையும் நன்கு செய்வார். பழகவும் பழகியவரைக் கத்தரித்து விடவும் தெரிந்தவர்.

### குடும்பம்

பெரிய குடும்பத்தில் பிறந்திருப்பர். நல்ல குடும்பப்பெருமையுள்ளவர். மனமொத்த வாழ்க்கைத்துணைவி அமைவர். இவர் சம்பாத்தியத்தில் குடும்பம் நடக்கும். குடும்பத்தில் அதிகாரமும் செய்வர். அன்புடனும் இருப்பர். மகிழ்வுடன் பிள்ளைகுட்டிகளுடன் வாழுவர். தம் உழைப்பாலும் புத்தியாலும் கல்வியனுபவத்தினாலும் வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்த்திடுவர். பிறருக்கும் உதவி தாமும் உயருவர். ஒற்றுமையாகக் குடும்பம் வாழும்.

### தொழில்

கல்வியிலும் பேச்சிலும் சிறக்கும் இவர்கள் கல்லூரி பேராசிரியர், லாபரட்டரியில் ஆய்வாளர் என விளங்குவர். சாத்திரம், ஜோதிடம் பூஜை யோகம் எனப் பல நல்ல துறைகளில் அறிவை அடைவர். கணக்கும் விஞ்ஞானமும் கூட வரும். அரசியலிலும் சினிமாத்துறையிலும் கூட சிறப்புறுவர். பொதுநல வாழ்க்கையிலும் ஈடுபடுவார். ஆட்சித்துறையில் பங்கு பெறுவர். ஆசிரியர்களாக விளங்குவர்.



கடை வைத்து பல்பொருள் விற்றுப் பணக்காரராவர். வியாபாரம் நன்கு வரும். வாழ்க்கையில் பெண்கள் மூலம் திடீரென தொழில் உயர்ந்து பெரிய அதிஷ்டம் வரலாம்.

இவர்கள் பிறரிடம் வேலை பார்த்தால் இவரது அதிஷ்டம் அவர்களுக்குப் போகும். தரகு வியாபாரமும் பள்ளிப்பாடப் புத்தகம் விற்பனை செய்தலும் ஆன்மிக மடம் வைத்தலும் மிகப் பயனுள்ளாதாகிச் சிறந்து விளங்கும்.

### நோய்

அமில நிலை ( Acidity), வயிறு சரியின்றி தோல் வியாதிகள், எக்ஸீமா, கட்டிகள், குறைந்த ரத்த அழுத்தம் கப நோய்கள், மலேரியாக் காய்ச்சல், பித்தவாந்தி முதலியவை தாக்கலாம்.

# உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டெண் 04 இன் பலன்கள்

### தோற்றம்

சூரியனுடன் ராகு சேரந்த ஆதிக்கம். ஆசாமி இரட்டை நாடி சரீராமாக உயரத்துடன் ஆஜானுபாகுவாக இருப்பார். முதலில் ஒல்லியாக இருந்தாலும், பின்னால் வாட்ட சாட்டமாக ஆகி விடுவர். மாநிறமாக இருப்பர். சதுரமான முகமிருக்கும் எடுப்பான மூக்கிருக்கும். மண்டை அளவாக இருக்கும். பற்கள் சிறியவையாக வரிசையாக இருக்கும். கண்கள் மேலாக இருக்கும்.

### குணம்

தெய்வ நம்பிக்கை இருக்கும். இங்கிதம் உலகநடைமுறை தெரிந்திருப்பர். ராஜதோரணை அமைந்திருக்கும். பண்டைய பழக்க வழக்கங்களை மதித்து நடப்பர். சூழ்நிலைக் கேற்பவும் அனுசரித்து நடப்பர். நன்கு பேசுவர். அரட்டையும் அடிப்பர். விளையாடிப் பொழுது போக்கப் பிரியப்படுத்துவர். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவர். சாவல் விடுவர். சாத்திரசம் பிரதாயப்படி நடப்பர். மனோதிடமி ருக்கும். எது நடந்தாலும் அசராத இதயத்துடனிருப்பர். வாக்கு தவறாமல் இருப்பர். கடமையைச் செய்து பெயர் பெற விரும்புவர். நாலும் தெரிந்தவராக இருப்பதுடன் பிறருக்கும் புத்தி புகட்டுவர். வெற்றி பெறுவர். பெருமைப் படுவர்.

சாதாரண நிலையிலும் தன்னம்பிக்கையுடன் உழைத்து போராடி முன்னேறுவர். அனைவரையும் சரிசமமாக எண்ணி நட்போடு பழகுவர். புதிய நிறுவனம் அமைப்பை தோற்று விப்பர். நிறைய பொருட் செல்வம் சேர்ப்பர். பலருக்கு வேலை தருவர். பிரபலமும் புகழும் அடைவர். நாணயமுள்ளவராவர். சிலர் சில தவறான சுகபோகங்களிலும் ஈடுபட்டுப் பிரச்சினைகளை சந்திப்பர். கெட்ட சிநேகிதர்களால் படிப்பு கெடுவதும் உண்டு. சாது என்றே இவர்களைச் சொல்லலாம். காதலிப்பர். படிப்பர். பலவற்றையும் படிப்பர். அனைத்திலும் ஓரளவு அறிவு பெற்றே இருப்பர். சூதாட்டில் ஈடுபடுவர். ஓரளவு பணமும் பண்ணுவர்.

பொதுநல வேலைகளில் மிக்க ஈடுபாட்டோடிருப்பர். பகை இன்றி பழிவாங்கும் உணர்வின்றி வாழ்வர். வாழ்வில் எதிர்பாராமல் ஏகப்பட்ட ஆபத்துக்களையும் அடைவர். பெண்களால் துன்பமும் உறுவர். யாராலும் வெறுக்கப்படாத மனிதராக வாழ்வர். சிலர் சாதனைகளை நிகழ்த்தி ஆசாதாரண மனிதராகவும் வாழ்வர். கடலையும் கடப்பர்; மலை யையும் பெயர்த்து வருவர் எனச் சிலர் கூறப்படுவது போல பாராட்டப்படுவர். அரசாங்கத்திடம் விருதும் பரிசும் பெறுவர். நிறைய சுயநல மற்ற காரியங்களைச் செய்வர். சிலர் தொந்தி தொப்பையுடன் சுக வாழ்க்கை நடத்துவர்.

### குடும்பம்

சுக நாட்டமுடைய இவர் சரீர சுகம், வசதிகளை விரும்புவர். பிறர்மூலம் கிடைக்கும் பொருளால் நண்பர்களுக்கு நிறையச் செலவு செய்வர். சாதாரண நிலையிலிருந்து குடும்ப நிலையை மிக உயர்த்துவர். உலக நடைமுறைகளை அனுசரித்துப் புகழ்ந்து பிறர் பாராட்ட எப்படி வாழ வேண்டுமோ அப்படி வசதிகளுடன் மெச்சத்தக்க வாழ்க்கை நடத்துவர். காதல் வாழ்க்கை போராட்டம் தரும். குடும்ப வாழ்க்கையில் சிரமம் இருக்கும். கவலை இருக்கும். சகோதர, சகோதரி, உற்றார் உறவினருடன் ஒன்றாக வாழவே விரும்புவர். நடக்காது.

### தொழில்

பொது மக்களிடம் இருந்து பணம் கிடைக்கும். சொந்தத் தொழில் நடத்துவர். அரசு நிர்வாக அதிகாரிகளாக இருப்பர். அச்சகம், பத்திரிகை, எழுத்து, சினிமா, தொழிற்சாலைகளில் வேலை புரிவர். போக்குவரத்து வாகன தொழில்களிலும், கமிஷன் ஏஜண்ட்டாக, கட்டட வேலைக்காரராக, ஃபோர்மேன்னாக இருப்பர். பெற்றோல் அக்னி உலை தொடர்பான தொழிற்சாலைகளில் தொழில் செய்வர். ஆட்டோ, வாடகைக்கார் சொந்தக்காரராக இருப்பர். எத்தொழிலும் இவரால் சிறப்பாகச் செய்யப்படும். எண் சோதிடம் சிறக்கும்.

### நோய்

வாயு தொர்பான நோய் வரும். உடல் பருமன் ஒரு குறையாகும். வெப்பமும் பாதிக்கும். இரத்த அழுத்தம், சைனஸ், மலேரியா, மஞ்சள் காமாலை, மலச்சிக்கல் வரும்.

*(தொடரும்)*

கணித்தவர்-ஸ்வாமி-

# இலங்கை தொலைபேசி கோபுர சிக்னல் தனுஷ்கோடிவரை

## இந்திய ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள தொலைபேசிக் கோபுரங்களின் சிக்னல் தனுஷ்கோடி வரை எட்டுவதால் கடத்தல் கும்பல்களுக்கு கடற்படையினரிடமிருந்து தப்புவதற்கு வசதியாக உள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு இராமேஸ்வரத்திலும், தலைமன்னாரிலும் 100 மீற்றர் உயரத்தில் டிரான்ஸ்மிஷன கோபுரம் அமைக்கப்பட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தொலைபேசி சேவை அளிக்கப்பட்டது.

1983இல் இலங்கையில் உள்நாட்டு போர் தீவிரமடைந்தபோது இந்த கோபுரங்கள் மூலம் தொலைபேசி சேவையை வழங்குவது தடைப்பட்டது. பின்னர் 1988இல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்த போது மீண்டும் அந்த கோபுரங்கள் செயறபடத் தொடங்கின.

இந்த நிலையில், 2003 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையில் தொலைத்தொடர்பு துறை தனியார்மயமாக்கப்பட்ட பின்னர், பிரபல இந்திய தனியார் தொலைபேசி நிறுவனங்கள் பல இலங்கையில் தங்களின் சேவைகளை வழங்கி வருகின்றன.

தற்போது இலங்கையிலுள்ள தலைமன்னார் துறைமுகத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களின் தொலைபேசி சேவை 30 கி.மீ. தூரம் வரை துல்லியமாக கிடைக்கிறது.

இதனால் கடத்தல்காரர்களுக்கு இவை பெரும் உதவியாக உள்ளதாம்.

கச்சதீவு, இந்திய - இலங்கை மணற்தீடைகள் மற்றும் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரையிலும் இலங்கை தொலைபேசி நிறுவனங்களின் சேவை எட்டுவதால் கடத்தல் கும்பல்கள் இந்திய மற்றும் இலங்கை கடற்படையினரின் நடமாடட்டத்தை அறிந்து கொண்டு படையினரிடம் இருந்து டிமிக்கி கொடுத்து விட்டு எளிதாக தப்பி விடுவதாக கூறப்படுகிறது. (அ)

# பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில்

சில முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து நாட்டின் சகல பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டமொன்றில் ஈடுபட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 3ஆம் திகதி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி போராட்டமொன்றை முன்னெடுக்கப் போவதாக பல்கலைக்கழக பேராசிரயர்கள நேற்று முன்தினம் உயர் கல்வி அமைச்சிற்கு அறிவித்துள்ளனர.

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதிலளிக்காவிட்டால் கடுமையான தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் மோசமான முறையில் ஒடுக்கப்படுகின்றனர். 2012ஆம் ஆண்டில் அரசாங்கம் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை என தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுபதனைத் தவிர் வேறு வழியில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)



யாழ்.சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் அதிபர் ஏ.எம்.சி. மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற போது...

## வெசாக் தினத்தில் 30 ஆயிரம் பொலிஸார் கடமையில்

வெசாக் தினங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 30 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பௌத்த கலாசாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்தோடு வெசாக் தினத்தை முன்னிட்டு விசேட பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்பின் மேன்மை!



...பிறகு தொடர்ந்து, "நம் ராஜ்ஜியத்தை இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவன் வீதம் உங்கள் இருவருக்கும் பட்டம் சூட்டப்போகிறேன். அதன்பிறகு நான ஓய்வெடுத்துக்கொள்ளப் போகிறேன்" என்றார். தந்தையின் உத்தரவை மீறி அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. விரைவிலேயே, இருவருக்கும் பட்டாபிஷேகம் நடைபெற்றது. அதன்பிறகு சில ஆண்டுகளில் திருமணமும் நடைபெற்றது. ஜெயனுக்கு விரைவிலேயே ஒரு மகள் பிறந்தாள். விஜயனுக்குக் குழந்தைகள் உண்டாகவில்லை.


அதற்குள், நைமிகாரண்யத்தில் சுதாமாவின் குருகுலவாசம் முடிவடைய, அவன் வித்யாரண்யம் சென்று தன் பழைய குரு வித்யாபதியை சந்தித்தான். குருவை வணங்கிய பிறகு அவரிடம், "தங்களுடைய அறிவுரையின்படி மேலும் கல்வி பயின்றேன். இனி, எஞ்சிய காலத்தை என் நண்பர்கள் ஜெயன், விஜயன் அருகில் இருந்து கழிப்பேன்!" என்றான். அதற்கு வித்யாபதி, "சுதாமா! அவர்கள் இப்போது நாட்டை ஆளும் மன்னர்கள். அங்கு செல்வதைவிட, என்னுடைய குருகுலத்தை நீ ஏற்று நடத்துவாய்!" என்றார்.

சுதாமாவிற்கு குரு கூறியது சரியென்று தோன்றியது. அன்றுமுதல் குருகுலத்தின் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்டு, இரவு, பகல் பாராது மாணவர்களுக்குக் கற்பித்தான்.

ஆசிரியப் பணியில் அவன் உள்ளம் பெரிதும் ஈடுபட்டதால் திருமணம் செய்துகொள்ளவில்லை. சுதாமாவிற்கு சுதர்சன் என்ற ஒரு மாணவன் கிடைத்தான். சுதர்சன் ஒரு சிற்றரசரின் மகன். அவனுடைய தந்தை ஒரு போரில் கொல்லப்பட்ட பின், அவனுடைய சிறு ராஜ்ஜியம் எதிரிகள்வசம் சிக்க, சுதர்சன் தன் தாயுடன் கேகய நாட்டில் வசிக்க ஆரம்பித்தான். தந்தையற்ற சுதர்சன் தன் குரு சுதாமாவைத் தன் தந்தையாகவே பாவித்தான்.

ஒருமுறை சுதர்சன் குருவின் அனுமதியுடன் தன் தாயைப் பார்க்கச் சென்றிருந்தான். ராஜவீதியில் அவன் சென்று கொண்டிருந்த போது, திடீரென இரண்டு குதிரைகள் பூட்டிய தேரில் சென்று கொண்டிருந்த ஓர் இளம் பெண் "காப்பாற்றுங்கள்!" என்று கூச்சலிட்டது காதில் விழுந்தது.

ராஜ குடும்பத்தைப் போல் தோற்றமளித்த அவள் தேரைத் தனியாக தான் மட்டும் செலுத்திக் கொண்டு வந்த வேளையில், குதிரைகள் கட்டுக்கடங்காமல் தலை தெறிக்க ஓடின. நிலைமையை உணர்ந்த சுதர்சன் ஒரே தாவாகத் தாவி தேரில் ஏறி, அவள் கையிலிருந்த குதிரைகளின் சேணத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, கண நேரத்தில் குதிரைகளை அடக்கிவிட்டான்.



"யாரம்மா நீ? பார்த்தால் இளவரசி போல் தோன்றுகிறாய்! இனியாவது, தேர் ஓட்டும்போது இத்தகைய முரட்டுக் குதிரைகளைப் பூட்டாமல், நல்ல குதிரைகளாகப் பூட்டு!" என்று கூறியவனின் முகம் நோக்கி, "என் பெயர் இந்து! நான் மன்னர் ஜெயனின் மகள்! என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி!" என்றாள். அதன பிறகு அவளை பத்திரமாக அரண்மனைக்குக் கொண்டு சென்றுவிட்டான்.

குருகுலத்திற்குத் திரும்பி வந்தபின், சுதாமாவிடம் நடந்த சம்பவத்தை கூறி, "என் மனம் அந்த இளவரசியின் பால் சென்றுவிட்டது. நீங்கள்தான் மேற்கொண்டு உதவி செய்ய வேண்டும்!" என்றான். அவன் குறிப்பிட்ட அந்த ராஜகுமாரி தன் நெருங்கிய நண்பர்களில் ஒருவனான ஜெயன்தான் என்று தெரிந்ததும் சுதாமா மகிழ்ந்து போனான். சுதர்சனின் ஆசையை நிறைவேற்ற, உடனே அவன் சுதர்சனையும் அழைத்துக் கொண்டு கேகய நாட்டு மன்னன் ஜெயனிடம் சென்றான். அப்போது ஜெயனுடன், விஜயனும் இருந்தான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் உயிர் நண்பனைக் கண்டதும், இருவரும் ஓடிச் சென்று சுதாமாவை கட்டித் தழுவிக் கொண்டனர். பல ஆண்டுகள் கழித்து சந்தித்த மகிழ்ச்சியில் நேரம் போவதே தெரியாமல் பேசிய பிறகு, சுதாமா "நண்பர்களே! நான் வந்த விடயத்தை மறந்தே விட்டேன்! இதோ நிற்கிறானே சுதர்சன், இவன் என் பிள்ளையைப் போன்றவன். அன்று ஜெயனுடைய புதல்வியைக் காப்பாற்றியது முதல் இவன் அவள் நினைவாகவே இருக்கிறான். சுதர்சன் ராஜகுலத்தைச் சேர்ந்தவன். இவனுடைய தந்தை ஒரு காலத்தில் கேகய நாட்டை ஆண்டவர்!" என்றார்.

"ஆகா! அந்த இளைஞன் இவன்தானா!" என்ற ஜெயன், "என் மகளும் அன்று முதல் இவன் நினைவாகவே இருக்கிறாள். இவனை எப்படி எங்கே கண்டுபிடிப்பது என்று நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம்! நல்லதாகப் போயிற்று! விரைவிலேயே திருமணத்தை நடத்திவிடலாம்!" என்றான்.

பிறகு இரு மன்னர்களும் சேர்ந்து, "சுதாமா! இதுநாள் வரை நீ எங்களைப் பிரிந்திருந்தது போதும். இனி, எங்கள் உயிர் நண்பனான உன்னை ஒரு நிமிடமும் பிரியமாட்டோம்.

நீ இன்று முதல் எங்களுடன் இருப்பாய்" என்று சொல்ல, சுதாமாவும் சம்மதித்தான்.

(முற்றும்)

## 05.2014 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1525 -ஜேர்மனியின் பிராங்கென்ஹவுசன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரை அடுத்து விவசாயிகளின் போர் முடிவுக்கு வந்தது.
- 1618 - ஜொஹான்னெஸ் கெப்லர் முன்னர் மார்ச் 8 இல் நிராகரிக்கப்பட்ட தனது மூன்றாவது கோள் இயக்க விதியை மீண்டும் நிறுவினார்.
- 1718 - உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டனைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜேம்ஸ் பக்கிள் பெற்றார்.
- 1756 - இங்கிலாந்து பிரான்சின் மீது போரை அறிவித்ததில் ஏழாண்டுப் போர் ஆரம்பமாயிற்று.
- 1796 - நெப்போலியனின் படைகள் இத்தாலியின் மிலான் நகரைக் கைப்பற்றினர்.
- 1851 - நான்காவது ராமா தாய்லாந்தின் மன்னராக முடிசூடினார்.
- 1860 - கரிபால்டியின் படைகள் சிசிலியின் நேப்பில்ஸ் நகரைக் கைப்பற்றினர்.
- 1915 - இந்திய பாதுகாப்புச் சட்டத்தை முன்னிறுத்தி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் ஷவ்கத் அலியும் முகம்மது அலியும் கைது செய்யப்பட்டு சிந்துவாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.
- 1932 - ஜப்பானியப் படையினர் ஷங்காயை விட்டுப் புறப்பட்டனர்.
- 1932 - ஜப்பானின் பிரதமர் இனூக்காய் த்சுயோஷி அரசுக் கவிழ்ப்பு முயற்சியில் கொல்லப்பட்டார்.
- 1935 - மொஸ்கோவில் சுரங்க தொடருந்து சேவை ஆரம்பமானது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பெரும் போருக்குப் பின்னார் டச்சுப் படைகள் நாசி ஜேர்மன் படைகளிடம் சரணடைந்தன.
- 1948 -ஷ்ரேல் மீது அரபு நாடுகளான எகிப்து, ஜோர்தான், லெபனான், சிரியா, ஈராக், மற்றும் சவுதி அரேபியா ஆகியன இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன.
- 1955 - உலகின் ஐந்தாவது உயரமான மக்காலு மலையின் உச்சியை பிரெஞ்சு மலையேறிகள் முதன் முதலாக எட்டினர்.
- 1972 - 1945 முதலை ஐக்கிய அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த ஒக்கினாவா தீவு மீண்டும் ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 1978 - டோக்கியோ பங்குச் சந்தை அமைக்கப்பட்டது.
- 1985 - குமுதினி பட்குப் படுகொலைகள், 1985: நெடுந்தீவு மாவலித்துறையிலிருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினி என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.
- 1988 - எட்டு ஆண்டுகள் போருக்குப் பின்னர் சோவியத் இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானில் இருந்து பின்வாங்கத் தொடங்கினர்.

பிறப்புக்கள்

- 1859 - பியேர் கியூரி, பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1906)
- 1912 - இராமசுவாமி ஐயர் (புளிமூட்டை), நகைச்சுவை நடிகர்.
- 1916 - கம்பதாசன் கவிஞர், எழுத்தாளர், தமிழ்திரைப்பட பாடலாசிரியர். (1973)

இறப்புகள்

- 1978 - ரொபேர்ட் மென்சீஸ், அவுஸ்திரேலியாவின் 12ஆவது பிரதமர் (பி. 1894)

### குமுதினிப் படகுப் படுகொலைகள்- 1985



குமுதினிப் படுகொலைகள் அல்லது குமுதினி படகுப் படுகொலைகள் என்பது 1985 ஆம் ஆண்டு மே 15 ஆம் நாள் நெடுந்தீவிற்கும் புங்குடுதீவிறகும் இடையில் சேவையாற்றிய குமுதினிப் படகில் பயணம் செய்தவர்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட நிகழவைக் குறிக்கும். நெடுந்தீவின் மாவலித்துறையில் இருந்து நயினாதீவின் குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு குமுதினிப் படகில் சென்ற பயணிகள் இலங்கை கடற்படையினரால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 36 பேர் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

நேரில் கண்டவர்களின் சாட்சியத்தின் படி, இலங்கை கடற்படையைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படும் ஆறு நபர்கள் படகில் ஏறினர். படகில் பயணம் செய்தவர்களை முன்னே வரும்படி அழைத்து ஒவ்வோருவரையும் தமது பெயர், வயது, முகவரி, எங்கு செல்கிறார்கள் போன்ற விவரங்களை உரத்துக் கூறும்படி பணிக்கப்பட்டார்கள். பின்னர் அவர்களை வாள்களாலும் கத்திகளாலும் வெட்டிக் கொன்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

41

...ஏன் சாமி பெயர்? பூவின் பெயரைச் சொன்னாலும் மனசு ஒருமுகம் ஆகுமா ஆகாதா? என்கிறேன்.

இருவரும் தியானிக்கிறோம்.

ஏ.சி.யின் ஓசையைத் தவிர எல்லா ஓசையும் நின்றுபோகிறது.

கொஞ்ச நேரத்தில் அந்த ஓசையும் தொலைந்து போகிறது.

என்ன இது! எனக்கு என்ன நேருகிறது?

நான் எங்கோ கீழே.... கீழே... தரையே இருக்க முடியாத ஒரு பாதாளத்தில் பயணிக்கிறேன்.

என் வசத்தில் நானில்லை.

என் குதிரைகளின் லகான்கள் என் கையை விட்டுப்போய்விட்டன.

திடீரென்று ஒரு வெளிச்சம்; என்னைச் சுற்றிக் கோடி சூரியப் பிரகாசம்.

அதைத் தாள முடியாமல் தவிக்கிறது உடம்பு.

எனக்கு மூச்சுத் திணறுகிறது.

கண்களைத் திறக்க முடியவில்லை.

முதன் முதலாய் உன் பெயர் சொல்லிக் கத்துகிறேன்.

என்னை உசுப்பி என் நிலைக்குக் கொண்டு வந்த நீ என் அனுபவம் சொல்ல ஆச்சரியம் கொள்கிறாய்.

அன்றிலிருந்து என்னை நீ சாமி என்று அழைக்க ஆரம்பித்தாய்.

எனக்குச் சிரிப்பு வந்தது.

உன்னை நானும் அப்படியே அழைக்க ஆரம்பித்தேன்.

உன் அறிக்கையைப் படித்ததும் எனக்குள் எழுந்த சந்தேகம் இதுதான்:

நான் தியானத்தைத் தொடர்வதற்காய்க் கடவுளைக் கழித்துவிட்டேன்: நீ கடவுளைத் தொடர்வதற்காய் தியானத்தைக் கழித்து விட்டாயா?

நண்பர் கமல்ஹாசன் என்னை அழைத்து அவரது புதிய சரித்திரப் படத்துக்கு வசனம் எழுதச் சொல்கிறார்; சந்தோஷத்




தோடு சரி என்கிறேன்.

ஆனால் லோக்சபையின் தீர்மானத்தை ராஜ்யசபா அடித்துவிடுவது மாதிரி நீ தடுத்துவிடுகிறாய்.

இப்படியெல்லாம் அடிக்கடி நான் சிரித்துக்கொள்ளச் சந்தர்ப்பம் தருகிறாய்.

நான் எப்போதும் நேசிக்கும் இனியவனே!

இப்போது சொல்கிறேன்.

உனது பட்டறையில் எனக்கெதிராய் அம்புகள் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன.

ஆனால் எனது யுத்தத் தொழிற்சாலையில்; கவசங்கள் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறேன்.

ஏனென்றால் என்னை எதிரியாக நீ நினைக்கிறாயே தவிர உன்னை எதிரியாக நான் நினைக்கவில்லை.

உன்னை நான் பிரிந்தோ என்னை நீ பிரிந்தோ அல்லது பிரிக்கப்பட்டோ நாம் தனித்துநின்ற சமயம் உனக்கு வேண்டாதவர்கள் சிலர் என் வீட்டுக்கு வந்தார்கள்.

உனக்கெதிரான அவர்களின் கூட்டணிக்கு என்னைத் தலைமையேற்கச் சொன்னார்கள்.

நான் கொதித்தேன்.

அவன் சிங்கம். நானும் சிங்கம். சிங்கத்துக்கும் சிங்கத்திற்குமே யுத்தம். நரிகளின் கூட்டணியோடு சிங்கங்கள் போர்க்களம் புகுவதில்லை என்று சீறிச் சினந்துபோய் வாருங்கள் என்றேன்.

மறுகணம் யோசித்து, வார்த்தைகளில் பாதியை வாபஸ் வாங்கிக் கொண்டு, போங்கள் என்றேன்.



நீ வீழ்ந்தாலும்- வீழ்த்தப்பட்டாலும் எனக்குச் சம்மதமில்லை.

இவ்வளவு உயரத்தில் ஏறியிருக்கும் ஒரு தமிழன் உருண்டுவிடக்கூடாது.

நீ வீழ்வாய் என்பதும் வீண் பேச்சு.

உன் தகுதிகள் உயர்ந்தவை.

உன் இசையெல்லாம் ஏதோ ஈஸ்வரன் கொடுத்த வரம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்.

தப்பு.

திரிவேணி சங்கமம்- என் திறமை.

அந்தப் பண்ணைப்புரத்து ஓடைக் கரைகளில்- தும்பிகள் பறக்கும் சோளக் காடுகளில் சேறு மணக்கும் வயல்களில்- காக்காய்க்குஞ்சு விளையாட்டி பூவரச மரத்து நிழல்களில் நீ கேட்டுக் கேட்டு வளர்ந்த கிராமத்து கீதங்கள் உன் முதல் சக்தி.

(தொடரும்)

-வைரமுத்து-

# இந்தியத் தேர்தல் களம்: காணாமற்போன அரசியல் நாகரிகம்



இந்திய மக்களவையின் பதினாறாவது தேர்தல் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதை முன்னிட்டு அரசியல் கட்சிகளின் பிரசார யுக்திகளும் சூடுபிடித்து வருகின்றன.

ஆனால் ஆட்சியாளர்களின் சாதனைகளையும் குறைகளையும் பேசி ஓட்டு வேட்டையாட வேண்டிய அரசியல் கட்சிகள் ஒன்றோடு மற்றொன்று ஆவேசமாக மோதி வருகின்றன.

வெறும் அரசியல் மட்டும் பேசாமல் அரசியல் பிரமுகர்களின் அந்தரங்க விவகாரங்கள் கிளறப்படுகின்றன. யாராவது ஒரு பிரிவினர் மீது துவேஷம் காட்டும் பேச்சுக்களை அனைத்து தரப்பினரும் பேசி வருகிறார்கள்.

இவற்றால் தேர்தல் காட்சிகள் மாறி வருகின்றன. இத்தனை காலம் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் அரசியல் நாகரிகம், கண்ணியம் உள்ளிட்ட பண்புகள் காணாமற் போவது குறித்த கவலையும் எழுகிறது.

. அரசியல் அரங்கத்தில் எதிரெதிர் துருவங்களாக இருந்த பலரும் தனிப்பட்ட வகையில் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்ததற்கான தரவுகள், இந்திய ஜனநாயகத்தில் ஏராளமாக உண்டு. கடைசிவரை எதிர்முகாம்களில் நாயகர்களாக விளங்கிய ராஜாஜியும், பெரியாரும் இணையற்ற நண்பர்களாக விளங்கினார்கள்.

தி.மு.க ஆட்சி மலர்ந்ததும் அண்ணாதுரை, முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவருமான பக்தவத்சலத்திடம் சென்று ஆசி வாங்கினார். எம்.ஜி.ஆரும், கருணாநிதியும் அரசியல் எதிரிகளாக இருந்தபோதும் தனிப்பட்ட முறையில் நட்புறவுடனே இருந்ததாகக் கூறப்படுவதுண்டு.

ஆனால் தமிழக அரசியலில் என்று கொள்கைகள் மறைந்து அவதூறு பேச்சுக்கள் அரசியல் மேடைகளில் முக்கியத்துவம் பெற ஆரம்பித்தனவோ அப்போதே நட்புறவுகள் மறைந்து, பகைமை உச்சத்துக்குச் சென்றுவிட்டது.

தமிழக அரசியலில் இத்தகைய நிலை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்டாலும், தேசிய அரங்கில் பல்வேறு அரசியல் கட்சியினர் மத்தியில் அரசியலுக்கு அப்பாற்பட்ட நட்புறவு நீடிக்கவே செய்தது.

.காங்கிரஸ் தலைவர்களும் பா.ஜ.க. தலைவர்களுடன் இயல்பாக கலந்துரையாடுவதும், கட்சி வேறுபாடுகளை மறந்து பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் இயல்பான ஒன்று. ஆனால் இந்த நட்புறவைத் தேர்தலுக்குப் பிறகு இத்தகைய நல்ல சூழ்நிலைகள் காணப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது.

இந்த முறை ஆட்சிக்கு வருவது காங்கிரஸ் தலைவர்களுக்கே சந்தேகம் என்பதால் அந்தக் கட்சியின் மத்திய அமைச்சர்களும், முக்கிய தலைவர்களும் அவதூறு பேச்சுக்களால் தேர்தல் பிரசாரக் களத்தில் இறங்கியுள்ளார்கள். மத்திய அமைச்சர்கள் கபில் சிபல், மணீஷ் திவாரி, அஜய் மக்கான் ஆகியோர் நரேந்திர மோடியைப் பற்றிய தனிப்பட்ட விவகாரங்களைக் கிளறுகிறார்கள்.

கட்சியின் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங்கைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். எப்போதுமே முதலில் கருத்து சொல்லிவிடுவார். அவரது மோடி பற்றிய பேச்சுக்குப் பதிலடியாக ஒரு பெண் பத்திரிகையாளருடன் இருந்த உறவு குறித்த வீடியோ ஆதாரத்தை பா.ஜ.க. வெளியிட்டது.

ஆனால் திக்விஜய் அசரவில்லை. தனது உறவை வெளிப்படையாக ஒப்புக் கொண்டவர், மோடி போன்று பல ஆண்டுகள் திருமண உறவை மறைக்கவில்லை என்றும் கூறினார். நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை நரேந்திர மோடி மறு எண்ணிக்கை அமைச்சர் என்று கிண்டல் செய்ய, அதற்கு பதிலாக, மோடியை மரண வியாபாரி என்று சிதம்பரம் வர்ணித்தார்.


மோடி தவிர மற்ற பா.ஜ.க. தலைவர்களை விட்டுவிட காங்கிரஸ் தயாராக இல்லை. அமிர்தசரசில் போட்டியிடும் அருண் ஜெட்லிக்கு எதிராகவும், அமேதியில் ராகுல் காந்திக்கு எதிராகப் போட்டியிடும் ஸ்மிருதி ராணிக்கு எதிராகவும் மண்ணின் மைந்தர் வேண்டும் என்ற கோஷத்தை காங்கிரஸ் வலுவாக எழுப்புகிறது.

உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய காங்கிரஸ் கட்சியின் சஹாரான்பூர் தொகுதி வேட்பாளர் இம்ரான் மசூத், மோடியைக் கண்டதுண்டமாக வெட்டுவேன் என்று உணர்ச்சி பெருக்கில் பேசினார். அதனால் அவர் உடனடியாகக் கைது செய்யபட்டதுடன், போட்டியிடும் வாய்ப்பையும் இழந்தார். (தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்பட வேண்டிய மிருதுமுறைத் திறன்கள்



கா.நிமலநாதன்
ஆசிரிய மாணவன்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
யாழ்.பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

ஓர் நிறுவனத்தின் வெற்றி என்பது ஆற்றலும் அறிவும் நிரம்பிய மக்களிலும் புத்தாக்கத் திறன் விளைவிலும் தங்கியுள்ளது.

உலகம் முழுவதும் காணப்படும் நிறுவனங்கள் இன்றைய போட்டித் தன்மை மிகுந்த உலகில் தம்மை நிலைபெறச் செய்வதற்காக தம் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் எவ்வளவு தூரம் தம்மைத்தாமே கையாளக்கூடிய தேர்ச்சிகளுடன் தமது வாடிக்கையாளர்கள், சகாக்களுடன் சிறந்த தொடர்புகளை பேணக் கூடிய தேர்ச்சிகளையும் உடையவர்களாக இருக்கிறார்களா? என்பதை அறிந்து கொள்வதில் அதிக கரிசனை காட்டுகின்றன.

வேலைத் தளமொன்றில் விளைதிறன் மிக்க வினையாற்றலை ஒருவர் கொண்டிருப்பதற்கு விளை பொருள் பற்றிய அறிவையோ தொழில்நுட்ப பகுப்பாய்வுத் திறன்களையோ மாத்திரம் கொண்டிருத்தல் போதாது. அதே வேளை கட்சிக்காரர்கள், வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், அரசு, பொது மக்கள் போன்றோரைக் கையாளவும் மேலதிகாரிகள், ஒன்றாக வேலை செய்வோர் போன்றோருடன் எப்போதும் ஆதரவு மற்றும் ஒத்துழைப்புத் தரும் வகையிலும் வேலை செய்வதற்கு வேண்டிய திறன்களை ஒருவர் கொண்டிருக்க வேண்டியது தற்காலத்தில் அவசியமாகிறது.

மிருதுமுறைத் திறன் என்றால் என்ன?

**மிருதுமுறைத் திறன் (Soft skill)**

ஒரு வரது சமூக மனவெழுச்சிசார் நுண்மதி ஆற்றலேயாகும். இது ஒருவரது ஆளு மையின் இயல்புகள், சமூக வசீகரங் கள், தொடர்பாடல், மொழியறிவு, சொந்த பழக்க வழக்கங்கள், சிநேக பாவம், நேரான மனப்பாங்கு போன்ற வற்றின் ஒருமித்த வெளிப் பாடேயாகும். தொழிலில் தொடர்ந்து முன்னேறுவதற்கு அத்தொழில் மற்றும் அதுசார்ந்த ஏணைய நடவடிக்கைகளை இலகுவாக்குவதே இந்த மிருது முறைத் திறனாகும்.

தற்காலத்தில் ஒருவரது தொழிற்தெரிவின் போது அல்லது தொழில்சார் முன்னேற்றத்தின் போது தனியே வன்திறன்கள் (விடய அறிவு) மட்டும் அளவிடப்படுவதில்லை. அதனோடு இணைந்ததாக அவரிடத்தில் அதிகளவு மென்திறன்கள் காணப்படுகின்றதா என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கான பாதையில் அங்கு பணிபுரியும் ஊழியர்களிடையே காணப்படும் மிருதுமுறைத் திறன்கள் (Soft skills) மிக முக்கிய பங்கை வகிக்கின்றது.

அவையாவன

- நல்ல முறையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்
- பிறரை வசீகரித்தல்
- அணி முகாமை செய்தல்
- பொறுப்புகளை ஒப்படைத்தல்
- மதிப்பிடுதல்
- அறிக்கை செய்தல்
- ஊக்கப்படுத்தல்
- ஆளிடைத் திறன்கள்
- ஆளகத் திறன்கள்
- முரண்பாடு தீர்த்தல்
- நேர முகாமைத்துவம்
- தலைமைத்துவம்
- முகாமைத்துவம்
- இலக்குத் தீர்மானித்தல்
- நெருக்கிடை முகாமை
- தீர்மானம் மேற்கொள்ளல்
- ஆக்கநிலைச் சிந்தனை போன்ற

வற்றைக் குறிப்பிட முடியும்.

பாடசாலையின் பங்களிப்பு

தற்காலப் பாடசாலைகள் மாணவர்களுக்கு தனியே கல்வியறிவை மட்டும் வளர்தெடுப்பதோடு நின்றுவிடாது, மென்திறன்களையும் கூடவே வளர்க்க வேண்டிய முக்கிய பணியையும் கொண்டுள்ளன.

ஒரு மனிதன் சமநிலை ஆளுமை கொண்டவனாகவும் சிறந்த நற்பண்புள்ளவனாகவும் பிறரால் விரும்பப் படுகின்றவனாகவும் நிறைவுள்ள மனிதனாக திகழ வேண்டுமானால் அவனிடம் சில விசேட மென்திறன்கள்



காணப்படுதல் வேண்டும். இத்திறன்களை சிறந்த முறையில் வளர்த்துக் கொள்ள கூடிய இடம் பாடசாலைகளேயாகும்.

எதிர்காலத்தை சிறப்பாக மாற்றியமைக்கக்கூடிய சமூகச் சிற்பிக ளான பாடசாலை மாணவர்களிடம் மிருதுமுறைத்திறன்களை வளர்த் தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பது இன்றைய பாடசாலைகளின் பாரிய பொறுப்பாகும். இதன் மூலமே சமூகத்திறன்கள், சுயதிறன்கள், சிந்தனைத் திறன்கள் என்பன நிறைந்த ஒன்றிணைந்த ஆளுமை கொண்ட மாணவர்களை உருவாக்க முடியும்.

எனவே, மாணவர்களிடம் மிருதுமுறைத்திறன்களை வளர்ப்பதற்கு வழிகாட்டல்என்பது மிகவும் அவசிய மானது என்பது வெளிப்படை. மாணவர்களிடையே மிருதுமுறைத்திறன்களை வளர்ப்பதின் அளப்பரிய பங்கு ஆசிரியர்களது கைகளில் தங்கியுள்ளது.

தற்கால உலகில் அனைத்திற்குமே போட்டிகள் அதிகமாகிவிட்ட சூழலில் ஒருவர் தனது திறன்களை முடிந்தளவு அதிகப்படுத்திக் கொள்வதே வெற்றிக்கு வழியாகும். பொதுவாக நேர்முகத் தேர்வு, வேலை செய்யும் இடங்கள், ஒன்றுகூடல்கள் போன்றவற்றின்போது அனைத்து வகையான உள் ஆற்றல்களையும் வெளிப்படுத்த உதவக் கூடிய வகையில் மிருது முறைத்திறன்களை வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய திறன்கள் பாடசாலை மட்டத்திலிருந்தே படிப்படியாக வளர்த் தெடுக்கப்பட வேண்டியதாகிறது. பாடசாலை மாணவர்களைப் பொறுத்த வரையில் இத்திறன்கள் அரிதாகக் காணப்படுவதுடன் ஒற்றுமையற்ற நிலை, அடிக்கடி பிரச்சினைகள் முரண்பாடுகளுக்கு உட்படும்நிலையை இன்று அதிகம் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, இத் திறன்களுக்கான பயிற்சி என்பது ஆரம்ப வகுப்புகளிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டிய விடயமாக காணப்படுகிறது.

இன்றைய நிலையில் வேலை வாய்ப்பை வழங்கும் நிறுவனங்கள் ஒரு பணியை விரைவாகவும் குறைந்த செலவுடன் சிறப்பாகவும் செய்து முடிக்கும் திறனை உடையாவருக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

ஒரு குழுப்பணி நிலையில் மேலதிகாரியும் பணியாளர்களும் மிக அதிகமாக நெருங்கிப் பணியாற்றும் சூழலில் ஒருவரின் ஆளுமைத் திறன்கள் வெளிப்படையாகத் தெரிகின்றது.

எனவே, ஒருவர் மற்றவருடன் சிறப்பாகத் தொடர்பு கொள்ளும் (Interpersonal) திறன்களை வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது. அத்திறன்களை சிறப்பாக வளர்த்துக் கொள்ளக்கூடிய இடம் பாடசாலையாகும்.

பாடசாலை மட்டத்தில் நிலவும் சிறந்த இடைத் தொடர்புகள் மூலமே இதனை வளர்த்தெடுத்துக் கொள்ள முடியும்.


எதையும் சாதிக்க வேண்டும் எனும் விடாமுயற்சி மாணவர்களிடத்தில் காணப்பட வேண்டிய சிறந்த திறனாகிறது. அதை பாடசாலை மட்டத்தில் கல்வியுடன் இணைந்ததாக ஏனைய செயல்கள் மூலம் சாதித்துக் காட்ட முடியும். இத் திறனை ஒருவர் பெற்றிருக்கும் போது அவரும் அவர் சார்ந்திருக்கும் குழுவும் எந்த வேலையையும் எளிதாக செய்து முடிக்க முடியும்.

மேலும் பாடசாலை மட்டத்தில் இனிமையாக பழகக்கூடிய நட்பு மனப்பாங்குகளையும் கட்டியெழுப்ப முடியும். இதனை ஆசிரியர் முன்மாதிரியாக நடந்து கொள்வதன் மூலம் கலைத்திட்ட நடைமுறைகளுக்கூடாகவும் வழிகாட்ட முடியும்.

சிறப்பான இலக்குளை எட்டும் போது பாராட்டுக்களையும் பிற ஊக்க வெளிப்பாடுகளையும் அதற்குக் காரணமான அத்தனை பேருக்கும் உரித்தாக்க வேண்டும்.

பரிவுடன் செவிமடுத்தல் அல்லது கிரகித்தல் என்பது மிகவும் முக்கியமானதாகும்.

இன்றைய நிலையில் மாணவர்களைப் பொறுத்த வரையில் வகுப்பறையில் கிரகித்தல், செவிமடுத்த



லில் அதிகம் அக்கறை செலுத்தாமல் இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆகவே கிரகித்தலின் அவசியம் மாணவர்களுக்கு உணர்த்தப்படுவதுடன், கிரகித்தல் அல்லது செவிமடுத்தலிற்குரிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு வழங்கி கிரகித்தலைத் தூண்டுவதுடன், அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் ஆசிரியரது பொறுப்புக்களிலொன்றாகக் காணப்படுகிறது.

எம்மை நாமே பாராட்டிக் கொள்வதுடன் ஊக்கப்படுத்திக் கொள்வ தும் ஓர் வகையான மிருதுமுறைத் திறனேயாகும்.

மாணவர்களை நகைச் சுவையுணர்வு பொருந்தியவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியதும் பாடசாலைகளின் பணியாகிறது. இதனை வெளியிலிருந்து கொண்டு வரமுடியாது. இயல்பாகவே அதனை வரவழைக்க வழிகாட்டல் வழங்க வேண்டும்.

அது மட்டுமல்லாது பல் கலாசாரங்களை உடையவர்கள் சேர்ந்திருக்கும் போது கிண்டலடிப்பது ஆபத்தானது என்பதையும் அவர்களுக்கு தெரியப் படுத்த வேண்டும்.

இப் பண்புகள் பிற்காலத்தில் வேலை செய்யும் இடங்களில் ஒருவர் மகிழ்ச்சியாக இருப்பதற்கு உதவுகிறது எனலாம்.

தற்காலத்தில் கல்வி உலகிலும் சரி, தொழிலுலகிலும் சரி தொடர்பாடல் திறன் மிகவும் வேண்டப்படும் ஒன்றாகக் காணப்படுகிறது.

எனவே, இத்திறனை மாணவப் பருவத்தில் வளர்த்துக் கொள்ளுதல் சாத்தியமானதாகவும் இயலுமானதாகவும் அமைந்து காணப்படுகிறது. பிறருடனான கருத்துப் பரிமாற்றம், தொடர்பாடல் என்பவற்றை மாணவர்களிடையே வளர்ப்பத்தில் ஆசிரியரது வழிகாட்டல் என்பது மிகமிக அவசியமானது.

எனவே, இப் பண்பை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் வகுப்பறையில் குழுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், களச்சுற்றுலாக்கள் செல்லல், கள ஆய்வுகள் மேற்கொள்ளல், கலந்துரையாடல் முறையிலான கற்பித்தலை




ஒழுங்குசெய்தல் போன்றவற்றினை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

நல்லொழுக்கம் மற்றும் நல் வேலைப் பழக்கம் போன்ற நற்பண்புகள் எவரிடத்தில் காணப்படுகின்றதோ அவர் எதிர்காலத்தில் சிறந்த ஒரு மனிதராக உருவாக முடிகிறது.

ஆகவே, மாணவப் பருவத்திலே சுய ஒழுக்கம், நல்வேலைப் பழக்கம், அர்ப்பணிப்பு, பொறுப்பு வகித்தலும் வகை கூறலும் எனப் பல்வேறு ஆளிடைத் திறன்களை வளர்த்தலுக்குரிய அறிவுரைகளை வழங்குவதுடன் அதற்கான வேலைத் திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் ஆசிரியருடைய வழிகாட்டலுடன் கூடிய முன்னெடுத்தலிலேயே தங்கியுள்ளது எனலாம்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறந்த வழி காட்டல் மூலம் பணிபுரிபவரை நன்கறிந்து அவர் மூலமாக வழிநடத்துதல், விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் சுபாவம், தோல்விகளைப் பொறுப்பேற்பதும், வெற்றிகளைப் பகிர்ந்து கொள்வதும் சிறந்த திட்டமிடல், சுயகட்டுப்பாடு, உறவுகளைக் கட்டியெழுப்புதல், குழுவேலை பழக்கம், வாழ் நாள் கற்றலும் தகவல் மேலாண்மைத் திறன்களும் சிறந்த தொழிற்றிறன், சுயம் பிம்பம், சுயமரியாதை, தன்னம்பிக்கை போன்ற இன்னோரன்ன மிருதுமுறைத் திறன்களை பல்வேறுபட்ட செயற்பாடுகள் மூலம் வளர்த்தெடுக்க முடியும்.

தனிநபர்களிடத்தில் (மாணவர்களிடத்தில் )மிருதுமுறைத் திறன்களை வளர்தெடுப்பதில் நான்கு முக்கிய பிரிவுகளில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென உளவியலாளர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

அவையாவன, ஒரு நபரின் உணர்வுகளையும் முடிவெடுப்பதில் அவை ஏற்படுத்தும் விளைவுகளையும் அறியும் சுய விழிப்புணர்வு முதற் தேவையாகும். மாறிவரும் சூழ்நிலைகளை உடனுக்குடன் அறிந்து அதற்கேற்ப தனிநபர் உணர்வுகளை கட்டுப்படுத்தும் சுய கட்டுப்பாடு இரண்டாவது தேவையாகும். சமூகப் பின்னலுக்கு இடையூறின்றி தனிநபரின் உணர்வுகளைக் கண்டறிந்து அவற்றைப் புரிந்து கொண்ட பின்னர் அதற்கேற்ப செயற்படும் சமூக விழிப்புணர்வு மூன்றாவது தேவையாகும். பணிச் சூழலில் முரண்பாடுகள் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட குழுவை நமது செயற்பாட்டின் மூலமாக நேர்ப்படுத்துவதும் அவர்களை மேம்படுத்துவதும் உறவு மேலாண்மையாகும். இது நான்காவது தேவையாகும் எனக் குறிப்பிடுகின்றனர். இதனூடாகவே மிருதுமுறைத் திறன்களை படிப்படியாக வளர்தெடுக்க கூடியதாகின்றது.

முடிவுரை

தனி நபரொருவரின் ஆளுமைத் தன்மையைத் தீர்மானிப்பதில் இம் மிருதுமுறைத் திறன்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மனிதனின் எண்ண ஓட்டத்துடன் இத் திறன்கள் நேரடித் தொடர்புடையது என்பதால் தற்போது பணி நியமனங்களைச் செய்வதற்கு முன்னர் பல நிறுவனங்கள் இவற்றை ஒருவர் பெற்றிருக்கிறாரா என்பதை அறிவதில் முனைப்புக்காட்டி வருகின்றன. இன்றைய மாணவர்களாகிய இளந் தலைமுறையினரே எதிர்காலச் சிற்பிகளாக நாட்டில் பல்வேறுபட்ட தொழில்களில் சிறந்து விளங்கப் போகிறார்கள்.


எனவே, அவர்கள் தொழில்சார் நிறு வனங்களிலும் ஏனைய இடங்களிலும் வினைத் திறனுடன் பணியாற்றுவதற்கு இம் மிருதுமுறைத் திறன்கள் அவசிய மானவை. இத் திறன்களை படிப்படியாக வளர்தெடுக்கக் கூடிய காலம் பாடசாலைக் காலமாகும். இக்காலத்தில் இத்தகைய திறன்களை வளர்ப்பதற்கு போதிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2014-14.06.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி,**
**கார்த்திகை 1 ஆம் பாதம்**

**நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க விரும்பும் மேட இராசிநேயர்களே! வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும் நேரம்!**

### வாய்ப்புகள் வாயிற் கதவைத் தட்டும் நேரம்!

வைகாசி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தனாதிபதி சுக்ரன் ராசிநாதன் செவ்வாயை பார்ப்பதால் தன வரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். சென்ற மாதத்தில் இருந்ததைக் காட்டிலும் இந்த மாதத்தில் தொழில் வளம் மேலோங்கும். தொகை வரவில் இருந்த தடை அகலும்.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் பதிவதால் நீண்ட நாட்களாகப் பேசிப்பேசி விட்டுப் போன வரன்கள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். நிச்சயிக்கப்பட்ட சுபகாரியங்கள் சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கான வழிபிறக்கும். ஆரோக்கியப் பாதிப்புகள் மட்டும் அடிக்கடி வந்து போகும்.

ஜென்ம ராசியில் கேது சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கோவில் வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். விடாப்பிடியாக செயற்பட்டு சில வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். சுக்ர பலம் நன்றாக இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்கும் சனி பகவான் வக்ர இயக்கத்தில் இருப்பதால் கூட்டாளிகளிடம் கொஞ்சம் கவனமுடன் இருப்பது நல்லது. தொடங்கிய தொழிலை ஒரு சிலர் கைமாற்றி விடலாமா என்று நினைப்பர். வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் குருப்பெயர்ச்சி வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

மாதக் கடைசியில் பெயர்ச்சியாகும் குரு, அர்த்தாஷ்டம குருவாக அமைந்தாலும் அதன் பார்வை பலம் தொழில் ஸ்தானத்தில் பதிவதால் கடந்த ஓராண்டாக இருந்த தொழில் வளர்ச்சி இனி கூடுதலாக இருக்கும். இருப்பினும் முன்னதாகவே குருவை வழிபட்டு அதற்குரிய சிறப்பு பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில் செய்து கொள்வதே நல்லது. குரு கவசம்பாடி வியாழன் தோறும் குரு தெட்சிணா மூர்த்தியை வழிபாடு செய்யுங்கள்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மேஷ ராசியில் மே மாதம் 24 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை உச்சம் பெற்று சஞ்சரித்து வந்த சுக்ர பகவான் இப்பொழுது உங்கள் ராசியில் அடியெடுத்து வைப்பது யோகம் தான். தன சப்தமாதிபதி ராசியில் வரும்பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

**புதனின் வக்ர இயக்கம்!**

உங்கள் ராசிக்கு 3, 6 இற்கு அதிபதியான புதன் மே 27ஆம் திகதி வக்ரம் பெறுகிறார். 6இற்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மை தான். எதிர்ப்பு, வியாதி, கடன் என்று எடுத்துரைக்கும் இடமான 6ஆம் இடத்திற்கு அதிபதி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது எதிரிகள் விலகுவர். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டுகொள்வீர்கள். உதிரி வருமானங்கள் பெருகும். கொடுத்த கடனை வசூல் செய்ய முடிய வில்லையே என்ற கவலை மாறும். நீங்கள் கொடுக்க வேண்டிய தொகையையும் கொடுத்து மகிழ்ச்சி காண்பீர்கள். மாற்று மருத்துவத்தின் மூலம் ஆரோக்கியத்தையும் சீராக்கிக் கொள்வீர்கள்.


**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

குரு உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் ஜூன் 13 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகின்றார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும். 9, 12 இற்கு அதிபதியான குரு உச்சம் பெறும் பொழுது விரயங்கள் கூடினாலும் வேண்டிய அளவு பொருளாதார நிலை உயரும். அதன் பார்வை பலத்தால் உடல் நலம் சீராகும். உன்னத தொழில் வாய்க்கும். இம்மாதம் முருகப் பெருமானை வழிபட்டு முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய உறவினர்கள் கைகொடுத்து உதவுவர். கூட்டு முயற்சியில் இலாபம் கிடைக்கும். புதனின் வக்ர இயக்கத்தால் விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். கட்டிடப் பணிகளை தொடர உங்கள் பெயரிலேயே ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வருவர். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறு வதற்கான சூழ்நிலை அமையும். சர்ப்ப சாந்தி செய்வது சந்தோஷம் தரும்.

சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,**
**ரோகிணி, மிருகசீரிடம்**
**1,2 ஆம் பாதங்கள்!**

**எந்த நேரமும் தொழில் முன்னேற்றத்தில் மனதைச் செலுத்தும் இடப இராசிநேயர்களே! உச்ச சுக்கிரனால் உன்னத பலன் கிடைக்கும் நேரம்!**

### உச்ச சுக்கிரனால் உன்னத பலன் கிடைக்கும் நேரம்!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வளர்ச்சி கூடும் விதத்திலேயே அமைந்திருக்கிறது. தைரியமும். தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தக்க சமயத்தில் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பணத்தேவையைப் பூர்த்தி செய்ய முன்வருவர். சிக்கல்களிலிருந்து விடுபடும் விதத்தில் மாதத்தின் முதல் பத்து நாட்கள் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

ராசிநாதன் உச்சம் பெற்று தொடங்கும் இந்த மாதத்தில் பொருளாதார நிலை எதிர் பார்த்ததை காட்டிலும் அதிகரிக்கும். பூமி யோகம் முதல் பொன், பொருள் வாங்க போட்ட திட்டம் வரை நிறைவேறும். வழிகாட்டியாக நண்பர்கள் உங்களுடனிருந்து வளர்ச்சி கூடுவதற்கு உறுதுணையாக இருப்பர். எதிர்பாராத தன லாபம் இல்லம் தேடி வந்து சேரும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

மிதுன குருவின் சஞ்சாரம் இம்மாதக் கடைசியில் மாறப் போகிறது. சகாய ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதியப் போவதால் கல்யாணக் கனவுகள் நனவாகும். காரிய வெற்றி அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் வரவில்லையே என்று ஏங்கியவர்கள் இனி மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும் விதத்தில் வாய்ப்புகள் வந்து அலை மோதப் போகின்றது. பணப்புழக்கம் அதிகரித்து மனக்கசப்பை மாற்றும்.

இம்மாதம் சனியின் வக்ர இயக்கம் காரணமாக தொழில் கூட்டாளிகளிடம் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரலாம். நண்பர்களிடம் நம்பி ஒப்படைத்த பொறுப்புகளை முடித்து விடுவார்கள் என்ற நம்பிக்கையோடு நீங்கள் இருப்பீர்கள். ஆனால் அவர்கள் அதை முடிக்காமல் மீண்டும் உங்களிடமே வந்து கொடுத்து நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூடச் சொல்லலாம். எல்லாவற்றிற்கும் வக்ர சனியின் ஆதிக்கம் தான் காரணம்.

யோக காரகனாக விளங்கும் ஒரு கிரகம் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது எதிர் பார்த்த அளவிற்கு நன்மையைச் செய்யாது. எனவே, சனி கவசம் பாடி, சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பணியிலிருந்த தொய்வு அகலும்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மேஷ ராசியில் மே 24ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விரய ஸ்தானம் புலமடைகிறது. எனவே, வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழுவீர்கள். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு அருகிலிருந்து அப்போதைக்கப்போது ஆலோசனைகளை வழங்குவர். வீடு கட்டும் அல்லது வாங்கும் முயற்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு செய்வர்.

**புதனின் வக்ர இயக்கம்!**

மே 27 ஆம் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ரம் பெறுவதால் குடும்பத்தில் சில குழப்பங்கள் உருவாகி மறையும். கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் லாபம் கிடைக்குமென்று நம்பி செய்த முயற்சிகளில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வீர்கள். புதனின் வக்ர காலத்தில் குழந்தைகளை அதன் போக்கில் விடாமல் நாம் மேற்பார்வை செய்து கொள்வது நல்லது. பிள்ளைகள் வழியில் சில விரயங்களை ஒரு சிலர் சந்திக்க நேரிடும்.

**குருப்பெயர்ச்சி தரும் யோகம்!**

ஜூன் 13 ஆம் திகதி கடக ராசிக்கு குரு செல்கின்றார். இது அவருக்கு உச்ச வீடாகும். என்னயிருந்தாலும் உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு பகை கிரகமாக விளங்குபவர் குரு. அவர் உச்சம் பெறும் இந்த நேரத்தில் அதன் பார்வை பலத்தால் ஒரு சில காரியங்களை உடனடியாக முடித்துக் கொடுப்பார். குறிப்பாக தொழிலுக்காக எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும். பண நெருக்கடி அகலும். புதிய கூட்டாளிகள் வந்திணைவர். இம்மாதம் வைகாசி விசாகத்தன்று முருகப் பெருமான் வழிபாட்டை வைத்துக்கொள்ளுங்கள். வளர்ச்சி கூடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். முதல் இரண்டு வாரங்கள் முன்னேற்றப் பாதைய்யை நோக்கிச் செல்லும். மாதத்தின் மையப் பகுதியில் பண நெருக்கடி அதிகரிக்கும். பக்கத்தில் உள்ளவர்களிடம் உதவி கேட்கும் சூழ்நிலை உருவாகலாம். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

ஒரு சில சமயங்களில் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குழந்தைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். வீடு கட்டும் முயற்சியில் தாமதம் ஏற்படலாம். விஷ்ணு வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும். விருந்தினர்களால் சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருமா நெருக்கடிநிலை?



2014 மக்களவைப்பொதுத் தேர்தல் முடிபை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியா எதைப் பிரதிநிதித்துவப்படுத்தப்போகிறது என்பதைத் தீர்மானிப்பதற்கான தேர்தல் இது என்று அரசியல் தலைவர்களும் அரசியல் விமர்சகர்களும் வர்ணிக்கின்றனர்.

இருப்பினும் மதசார்பின்மை, இந்து தேசியம் என்ற கருத்தாளர்களிடையே உருப்படியான விவாதங்களோ கருத்துப் பரிமாற்றங்களோ நடக்கவில்லை. வெறும் வசைபாடல்கள் தான் நடந்தன.

உலகின் பெரும்பாலான நாடுகளில் தேர்தல் என்றாலே இருவேறு முனைகளையுடைய அரசியல் கருத்துக்கள் தீவிரமாக அலசப்பட்டு மக்கள் அவற்றுக்குச் சார்பாக நின்று வாக்களிப்பார்கள்.

ஜனநாயகத்தின் அடிநாதமான அம்சமே இந்தக் கருத்து மோதல்களும் மக்களின் பங்கேற்பும்தான். இங்கோ, நரேந்திர மோடி பிரதமராகி விடுவாரோ என்று ஒரு தரப்பினர் அச்சமும் கவலையும் அடைவதைத்தான் பார்க்கிறோம்.

இந்தியாவில் தொடர்ந்து பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஆட்சிகள் அமைகின்றன. பிடிக்காத அரசுக்கெதிராகத் தேர்தலில் வாக்குச்சீட்டு மூலம் மக்கள் தீர்ப்பளித்து அவர்களை அகற்றுகின்றனர் என்பதைத் தொடர்ந்து பெருமையுடன் பார்த்து வந்தாலும் இத்தகைய அச்சம் நிலவுவது நமது ஜனநாயகத்தின் வலிமை குறித்தே கவலைப்பட வைக்கிறது.

இந்திய அரசானது விரிவாக எழுதப்பட்ட அரசியல் சட்டத்தின் அடிப்படையில் தான் செயற்படுகிறது.

ஆட்சிக்கு வருவோர் அத்துமீறி நடந்துவிடாமல் இருக்க ஏராளமான கண்காணிப்புகளும் கட்டுப்பாடுகளும் அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

அதுவும்போக, சுதந்திரமான நீதித்துறை நம்மிடம் இருக்கிறது. கூட்டணி அரசுக்குத் தலைமை தாங்கும் பிரதமர், அரசியல் சட்டத்தின் அம்சங்களை மீறிவிடாமல் பார்த்துக்கொள்ள குடியரசுத் தலைவர் இருக்கிறார்.

அரசு தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டுவிடாமல் தடுக்க விழிப்புள்ள எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

அரசைக் கடுமையாக விமர்சிக்கவும் தவறு செய்தால் அம்பலப்படுத்தவும் பத்திரிகைகள் இருக்கின்றன. நாட்டில் என்ன நடக்கிறது என்று கண்காணித்து அதற்கேற்பச் செயற்படும் மக்கள் அமைப்புகள் பல இருக்கின்றன.

ஆட்சியாளர்களால் நெருக்குதல்கள் அதிகமானால் அதிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் இராணுவத்துக்கும் சட்டரீதியாகவே பல பாதுகாப்பு ஏற்பாடுகளும் பொறுப்புகளும் அரசியல் சட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டமைப்புகளையும் ஏற்பாடுகளையும் மீறி மோடி செயற்பட்டுவிடுவார். எல்லாவற்றையும் தன் விருப்பத்துக்கு வளைத்துச் செயற்பட்டுவிடுவார் என்று அதற்குப் பிறகும் நினைத்தால் ஏற்கனவே ஏதோ தவறு நடந்துவிட்டிருக்கிறது என்றுதான் பொருள்.

### கடந்த காலத்தின் நிழல்

1975 முதல் 1977 வரை நெருக்கடிநிலை இருப்பதாகப் பிரகடனம் செய்து, இந்த நாட்டின் அரசியல் சட்ட அமைப்புகளுக்கெல்லாம் வாய்ப்பூட்டுப் போட்டு, கைகளைக் கட்டி அடக்கியாண்ட சிறு கும்பலின் செயல்கள் இன்னும் பலருடைய நினைவில் பசுமையாக இருப்பதால், அந்த அனுபவத்தின் விளைவுதான் இந்த அச்சம் என்று கருத வேண்டியிருக்கிறது.

அம்மாதிரி மீண்டும் நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அப்படி மீண்டும் நடக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர்.

நெருக்கடிநிலை பிரகடனம் குறித்தும் அதன் பிறகு நடந்த சட்ட மீறல்கள் குறித்தும் முறையாக விசாரித்து, தவறு செய்தவர்களைத் தண்டித்து, இனி அதுபோல நடக்காதிருக்க சட்டரீதியான ஏற்பாடுகளைச் செய்திருந்தால் இப்போது அச்சப்படத் தேவையில்லை.

நெருக்கடிநிலை காலகட்டத்தில் நடந்த அதிகார துஷ்பிரயோகம், சட்டமீறல்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நீதிபதி ஷா தலைமையிலான விசாரணை கமிஷன் விரிவாக விசாரித்தது.

இந்திரா காந்தியும் அவரைச் சேர்ந்த சிலரும்தான் இந்த அத்துமீறல்களுக்குக். காரணம் என்று கமிஷன் தனது விசாரணை அறிக்கையில் பதிவு செய்தது.

உள்நாட்டுப் பாதுகாப்புப் பாராமரிப்புச் சட்டம் (மிசா), இந்திய பாதுகாப்பு (இராணுவம்) சட்டம் ஆகிய இரண்டும் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது பதிவு செய்யப்பட்டது.

அரசியல் உள்நோக்கத்துடன்தான் மேலிடம் இந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது என்பது தெரிந்தும்கூட அன்றைய ஐ.ஏ.எஸ்., ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் அவற்றைக் கேள்வி கேட்காமல் அப்படியே ஏற்று அமல் செய்தனர்.

இதையெல்லாம் ஷா கமிஷன் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டும்கூட, தவறு செய்தவர்கள் மீது வழக்கும் பதியப்படவில்லை. தண்டனையும் விதிக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல, இனி இம்மாதிரி தவறுகள் நடக்காமலிக்க சட்டபூர்வமான பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் முனைப்பு காட்டப்படவில்லை.

இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு 1984 இல் சீக்கியர்களுக்கு எதிராக நடந்த வன்செயல்களும்,, 2002 இல் குஜராத்தில் நடந்த வகுப்புக் கலவரப் படுகொலைகளும் மக்களுடைய நினைவை விட்டு நீங்காமல் இருப்பதுடன் இவை மீண்டும் நடைபெறலாம் என்றே எச்சரிக்கின்றன.

இராணுவத்தை வரவழைத்துப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தும்வரை நாட்டின் சிவில் அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் அவ்விரு படுகொலைகளையும் தடுத்து நிறுத்தாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு தானிருந்தார்கள் என்பதும் இந்த அச்சத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

### அரசு நிறுவனங்கள்

நம் நாட்டின் உளவு நிறுவனங்கள், காவற்றுறை, சிவில் நிர்வாகம், நீதிமன்றங்கள் ஆகியவற்றை யாரும் முறையற்ற வகையில் கைப்பற்றிவிடாமல் தடுக்க சட்டப்பூர்வ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால், மக்கள் தங்களுடைய உரிமைகள் பறிக்கப்படும்போது இந்த அமைப்புகளை நாடமுடியும்.

சுருக்கமாகச் சொன்னால், சட்டப்படியான ஆட்சி நடக்கும்போது, யார் அல்லது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் பாதுகாப்பாக வாழ முடியும்.

ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் நடக்கிறது என்பதே நம்முடைய பெருமைக்குரிய பாரம் பரியமாக இருந்துவருகிறது. அப்படிப்பட்ட ஆட்சி மாற்றம் நாட்டின் எந்தப் பகுதி மக்களுக்கும் அச்சத்தை ஊட்டாமல் நடைபெற வேண்டும்.

ஷா கமிஷனும் அதைப் போன்ற விசாரணை அமைப்புகளும் தெரிவித்த பரிந்துரைகள் ஏன் சட்டமாக்கப்படவில்லை? ஆட்சியைக் கைப்பற்றுவது என்றால், இந்த அமைப்புகளையும் சேர்த்துக் கைப்பற்றுவது தான் என்பதே சிலரின் கண்ணோட்டமாக இருப்பதுதான் இப்போது அச்சத்துக்குக் காரணமாக இருக்கிறது.

ஒரு கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டால் தன்னுடைய நோக்கத்துக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் வகையில் எல்லா அமைப்புகளின் விதிகளையும் நடைமுறைகளையும் செயல்களையும் மாற்றிவிட முடியும் என்பதே இப்போதுள்ள நடைமுறை.

இது அமைப்பு ரீதியாக ஏற்பட்ட பலவீனம். வெவ்வேறு சித்தாந்தங்களைக் கொண்டவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் நிர்வாகமும் மக்களும் பாதிக்கப்படாத வகையிலும் செயற்பட சுதந்திரமான செயற்பாட்டுக்கு பாதுகாப்புக்கும் வழி செய்யப்பட்டிருக்கவில்லை.

அதுமட்டுமல்ல, முக்கியமான துறைகளில் பொறுப்புக்கு வருபவர்கள் தங்களுடைய பதவிக்குரிய கண்ணியத்தைக் காக்க வேண்டும், ஆட்சியாளர்களின் தாளத்துக்கேற்ப ஆடாமல் சட்டப்படியும் நியாயப்படியும் நடந்துகொள்ள வேண்டும் என்ற உறுதியை இழந்து, பதவியைக் காத்துக் கொள்ளவும் சலுகைகளை அனுபவிக்கவும் வளைந்துகொடுப்பது தான் இந்த அவலங்களுக்குக் கூடுதல் காரணம்.

கடுமையான சித்தாந்தம் உள்ள ஒருவர் ஆட்சிக்கு வந்து, அவர் இந்த அமைப்புகளையெல்லாம் பலமாகத் தாக்கினால் தாக்குப் பிடிக்க முடியாது என்பது உண்மையானால், மோடி என்பவர் நம்முடைய மிகப் பெரிய பிரச்சினை அல்ல, பிரச்சினையின் ஒரு அடையாளம் அவ்வளவே, அரசியல் நெருக்குதல்களுக்குத் தாக்குப்பிடிக்கும் தற்காப்பு அமைப்பு நமது அரசின் அங்கங்களுக்கு இல்லை என்பதையே இது வெளிப்படையாக உணர்த்துகிறது. இந்த அமைப்புகளின் அதிகாரங்களைச் சீர்குலைத்ததற்கும் சுந்திரத் தன்மையைச் சேதப்படுத்தியதற்கும் காங்கிரஸ் மட்டுமல்ல அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எல்லா அரசியல் கட்சிகளும்தான் பொறுப்பு.

மத்தியில் கூட்டணி அரசுக்கு மோடி தலைவரானால் இந்தியாவுக்கே ஆபத்து என்று யாராவது கூறினால், இந்தியா என்ற சிந்தனைக்கே அடையாளமான, பெருமைமிக்க ஆட்சியமைப்புகளை எந்தவிதத் தற்காப்பும் இல்லாமல் நிர்க்கதியாக விட்டவர்கள் யார்? என்ற எதிர்க்கேள்வியை கேட்டாக வேண்டும்.

-தி இந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு ரீதியாக சிந்திக்கும் எந்தநாடும் யுத்த வெற்றியை கொண்டாடாது

## தேசிய சமாதான பேரவை விசனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றிபெற்றதை முன்னிட்டு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நடத்தப்போகும் வெற்றி விழாவுக்காக மாத்தறை மாவட்டத்திலுள்ள 40 பாடசாலைகள் ஒரு வார காலத்துக்கு மூடப்படவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 18 ஆம் திகதி மாத்தறையில் இந்த வெற்றிவிழா பெருமெடுப்பில் நடைபெறவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் இவ்வாறு பாரியளவில் வெற்றிவிழாவை நடத்தும் அரசாங்கம், வடபகுதியில் போரால் மரணித்தவர்களை நினைவுகூரும் வகையில் நடைபெறும் நிகழ்வுகளைத் தடை செய்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளைப் போற்றுவதற்கு இவ்வாறான விழாக்கள் பயன்படுத்தப்படலாம் என்பதால் தான் இவற்றை தாம் தடை செய்வதாக அரசாங்கம் கூறியிருக்கின்றது.

நாட்டில் காணப்படும் இவ்வாறான துருவமயப்பட்ட நிலை குறித்து தேசிய சமாதானப் பேரவை தன்னுடைய கவலையைத் தெரிவித்திருக்கின்றது.

"30 வருட காலப் போரில் பெருந்தொகையான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறான இரத்தக்களரி மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காக நாம் அவர்களை நினைவுகூர வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் இதனை ஒரு பரிந்துரையாகக் கூறியுள்ளது" எனவும் தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.

"ஒரு உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் அதன் வெற்றியை அறிவுரீதியாகச் சிந்திக்கும் எந்த ஒரு நாடுமே கொண்டாடுவதில்லை. அமெரிக்க உள்நாட்டுப் போரின் வெற்றி இவ்வாறு ஒரு விழாவாகக் கொண்டாடப்படுவதில்லை" எனவும் தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஆசிரியர் மற்றும் அதிபர்கள் தொ.ச.போராட்டத்தில் குதிப்பர்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர் மற்றும் அதிபர்களும் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். தமது பிரச்சினைகள் பற்றி பல தடவைகள் எடுத்துக் கூறியும் கல்வி அமைச்சு மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருவதாக ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்களை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே பொறுக்க முடியும் என அதிபர், ஆசிரியர் கூட்டு தொழிற்சங்கத்தின் பேச்சாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகள் குறித்து ஒரு வருடத்திற்கு முன்னதாக பேசப்பட்ட போது, உடனடித் தீர்வு வழங்குவதாக கல்வி அமைச்சு அறிவித்த போதிலும் இதுவரையில் எவ்வித தீர்வுத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

70 ஆயிரம் ஆசிரியர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக பதவி உயர்வுகளுக்காக காத்திருக்கின்றனர்.

அதிபர், ஆசிரியர்களுக்கு இடையிலான சம்பள முரண்பாடு களை களைவதற்கான யோசனைகளையும் இதுவரையில் அமுல்படுத்தவில்லை தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்த போது தீர்வு வழங்குவதாக அறிவித்த கல்வி அமைச்சு பின்னர் தமது பிரச்சினைகளை மறந்து விட்டது என்றார். (அ)

# சம்பூர் மகா வித்தியாலயத்தை மாணவர்களிடம் ஒப்படையுங்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(திருகோணமலை)

கடற்படையினரின் பயிற்சி முகாமாக இயங்கி வரும் சம்பூர் மகா வித்தியாலயத்தை, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்குமாறு கோரி, இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தின் தொன்மையினைப் பறைசாற்றி நிற்கும் பழம்பெரும் கிராமம், சம்பூர்க் கிராமமாகும். அக்கிராமத்தின் தொன்மையினை ஒத்ததாகவே, சம்பூர் மகாவித்தியாலயம் விளங்குகின்றது.

2006 ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகச் சம்பூர் பிரதேச மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

எனவே அன்றிலிருந்து இன்றுவரை அப்பிரதேச மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல், அகதி முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

நாங்கள் எமது கிராமத்திற்குச் செல்வதற்கு எப்போது விமோசனம் கிடைக்குமென எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்துக் காத்திருந்து தங்கள் காலத்தை நகர்த்திய படியே பலர் உறங்கியும் விட்டார்கள்.

கல்வித்துறையில் பல சாதனைகள் படைத்த இவ்வித்தியா லயம், 2006 ஆம் ஆண்டு முதல், கடற்படையினரின் பயிற்சி முகாமாகவே இயங்கி வருகின்றது.

ஆனால் சம்பூர் மகாவித்தியாலயமோ, தற்பொழுது சேனையூர் மத்திய கல்லூரியின், மாணவர் விடுதியில் இயங்கி வருகின்றது.

இங்கு அடிப்படை வசதிகளற்ற நிலையில், ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருவதோடு, இச்சூழலிலும் தாங்கள் சளைத்தவர்களல்ல எனத் தமது திறமைகளை வெளிக்காட்டியும் வருகின்றனர்.

கற்றவர்கள் செறிந்துவாழும் எமது நாட்டில், கற்கத்துடிக்கும் மாணவர்களின் ஆதங்கம் புரியவில்லையா? ஏன் மௌனமாக இருக்கின்றீர்கள்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, இயற்கைத் துறைமுகமும், பாரிய கடற்படைத் தளமும் அமைந்து காணப்படும் உயர் பாதுகாப்பு வலயத்திலேயே பாடசாலையொன்று இயங்க முடியுமாகவிருந்தால் சம்பூரில் ஏன் பாடசாலை இயங்க முடியாது?

எனவே, கல்விமான்களும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் சம்பூர் மகாவித்தியாலயத்தை அதே இடத்தில் இயங்கச் செய்ய முன்வர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ர)

# இன்று ஒரு தகவல்

## தலைச்சுற்றல்

"சேர்! காலையிலே எழுந்ததிலிருந்து தலை சுற்றிக் கொண்டே இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே ஒருவர் இருந்தார்.

நிமிர்ந்து பார்த்தேன். அவர் தலை அப்படியேதான் இருந்தது. சுற்றவில்லை.

தலை நேராகத்தானே சேர் இருக்கிறது என்றேன்.

"உங்களுக்கு என்ன சேர்! கிண்டலாகத்தான் இருக்கும். அந்தந்த துன்பம் அவரவர்களுக்கு வந்தால் தா்ன் புரியும்" என்றார்.

அது இருக்கட்டும் சேர். தலை கிறுகிறுப்பாக இருந்தால் ஏன் என்னைத் தேடி வந்தீர்கள் என்று கேட்டேன்.

"எல்லாம் காரியத்துடன்தான் வந்திருக்கிறேன். அதை பின்னர் கூறுகிறேன். இப்போது நீங்கள் எனக்கு சொல்லுங்கள்" என்று சொன்னார்.

என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டேன்.

"தலைச்சுற்றல் வருவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டேன்.

உடம்பினுள்ளே ஏதோவொரு கோளாறு நமக்கு இருப்பதை முன் கூட்டியே அறிவிப்பாகக் கூறுவது தான் இது.

B.P என்று சொல்கிறோமே இரத்தக் கொதிப்பு; அது உடம்பிலே இருக்கிறதா என்பதை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

இரத்தக்குழாய் தடித்து இருப்பதை அறிந்து கொண்டால் கொழுப்பு, இனிப்பு ஆகியவற்றைக் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு புகைபிடிக்கும் பழக்கம் உண்டா? மதுப் பழக்கம் உண்டா? இப்படியெல்லாம் இருந்தால் தலை சுற்றல் இருக்கும். அந்தப் பழக்கத்தையெல்லாம் விட்டு விட்டால் இந்தத் தொந்தரவு இருக்காது.

இந்த உலகம் சுற்றிக் கொண்டே இருக்கிறது என்று ஒருவர் உங்களிடம் சொன்னால் உடனே அவர் பெரிய விஞ்ஞானி என்று நினைக்க வேண்டாம். ஏனென்றால் தண்ணீர் (சாராயம் குடிப்பவர்கள்) சாமிகள் கூட அப்படித்தான் சொல்லுவார்கள்.

சில பேருக்கு பித்தத்தினால் தலைச்சுற்று ஏற்படும். இதற்கு நமது வீட்டிலேயே மருந்து கிடைக்கும்.

இரசாயன தொழிற்சாலையிலே வேலை செய்கிற சிலருக்கு தலைசுற்றுவது வழமை. அங்கே இருக்கும் சூழல் ஒத்துக்கொள்ளவில்லை. அதனாலே தலையிலே ஒரு கிறுகிறுப்பு தெரியும்.

சில பேர் எதுக்கெடுத்தாலும் உடனே ஒரு தூக்க மாத்திரையை தேடி செல்வார்கள். இல்லையென்றால் தலைவலி மாத்திரையை வாங்கிப் போட்டுக் கொள்வார்கள்.

தூக்க மாத்திரை, தலைவலி மாத்திரை இதையெல்லாம் அளவுக்கு அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு தலை சுற்றல் வரும்.

சிலருக்கு நரம்பு மிகவும் பலவீனமாக இருக்கும். அவர்களுக்குக்கூட இந்தப் பிரச்சினை இருக்கும். நரம்பு பலவீனத்தை சீர்செய்தால் இந்தத் தொந்தரவு சரியாகி விடும்.

நமது உடல் சீராக இருந்தால் தான் மனம் உற்சாகமாக இருக்கும். அதனால் கெட்ட பழக்க வழக்கங்களை விட்டு விட்டால் வாழ்நாள் பூராகவும் துன்பம் இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்கலாம்.

இவ்வளவு விபரத்தையும் என்னிடம் வந்த அந்த தலைசுற்றல் ஆசாமியிடம் சொல்லி முடித்தேன் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமர் ஒல்மெர்ட்டுக்கு 6 ஆண்டுகள் சிறை

(ஜெருசலேம்)

இலஞ்ச வழக்கில் சிக்கிய இஸ்ரேல் முன்னாள் பிரதமர் எகுட் ஒல்மெர்ட்டுக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஜெருசலேம் நகரின் மேயராக எகுட் ஒல்மெர்ட் பணியாற்றினார்.

அப்போது, ஆடம்பர வீடுகள் அபிவிருத்தி திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் முறைகேடு செய்ததாக அவர் மீதும், 9 அரசு அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த டெல் அவிவ் நீதிமன்றம், ஒல்மெர்ட்டுக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தது.

பொறியாளருக்கு 7 ஆண்டுகள் தண்டனையும், ஏனையோர்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகள் வரை தண்டனையும் வழங்கப்பட்டது.

தான் ஒருபோதும் இலஞ்சம் கேட்டதில்லை, இலஞ்சம் வாங்கியதில்லை என்று மறுத்து வரும் ஒல்மெர்ட், தண்டனையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக தெரிவித்துள்ளார்.

# துருக்கி நிலக்கரி சுரங்கத்தில் பாரிய வெடி விபத்து; 201 பேர் மாண்டனர்

(இஸ்தான்புல்)

**துருக்கியில் உள்ள சோமா நகரில் நிலக்கரி சுரங்கம் உள்ளது. இஸ்தான்புல்லில் இருந்து 250 கி. மீற்றர் தூரத்தில் இருக்கும் அந்த சுரங்கத்தில் 800 இற்கும் மேற்பட்டோர் பணி புரிந்தனர். நேற்றுமுன்தினம் ஒரு பிரிவினர் பணி முடிந்து வேறு இடம் மாறும் போது சுரங்கத்தின் மின்சாரம் சப்ளை செய்யும் பிரிவில் திடீரென தீப்பிடித்து வெடி விபத்து ஏற்பட்டது.**

தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் விரைந்தனர். 420 மீற்றர் ஆழ சுரங்கத்தில் சிக்கி தவித்த தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இருந்தும் தீயில் கருகி 201 பேர் பலியாகினர்.

மேலும் 360 பேரை மீட்டனர். அவர்களில் 80 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே, பலி எண்ணிக்கை உயரும் என்று அஞ்சப்படுகிறது.

இதற்கிடையே சுரங்கத்துக்குள் மேலும் 200 பேர் சிக்கி தவிக்கின்றனர். அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



இந்த விபத்துக்கு கார்பன் மோனாக்சைடு விஷ வாயுவே காரணம் என தெரிய வந்துள்ளது. இந்த வாயு கசிவினால்தான் தீப்பிடித்து வெடி விபத்து ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

விபத்து பற்றி தகவல் அறிந்ததும் தொழிலாளர்களின் குடும்பத்தினரும், உறவினர்களும் சுரங்கம் முன்பு குவிந்தனர். கதறி அழுத அவர்கள் தொழிலாளர்கள் பற்றிய தகவலை ஆர்வத்துடன் கேட்டறிந்தனர்.

இந்த சுரங்க விபத்து துருக்கியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதமர் ரீசெப் தய்யிப் எர்டோகன் அல் பானியா நாட்டுக்கு செல்ல திட்டமிட்டு இருந்தார்.

சுரங்க விபத்து பற்றி அறிந்ததும் தனது பயணத்தை தள்ளி வைத்தார். மீட்பு நடவடிக்கைக்கு உத்தர விட்ட அவர் விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

# சிரியாவில் மீண்டும் இரசாயன தாக்குதல்

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் மீது இரசாயன ஆயுதங்களைக் கொண்டு அந்நாட்டு இராணுவம் கடந்த மாதம் தாக்குதல் நடத்தியுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் என்ற அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள 3 நகரங்களின் மீது, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட கலன்களில் குளோரின் வாயுவை செலுத்தி, இராணுவ ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தப்பட்ட தற்கான வலுவான ஆதாரங்கள் இருப்பதாக நியூயோர்க்கைச் சேர்ந்த அந்த மனித உரிமை அமைப்பு கூறியுள்ளது.

இதுதொடர்பான வீடியோ பதிவுகள், புகைப்படங்கள், தாக்குதலை நேரில் பார்த்தவர்களின் பேட்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில், தாங்கள் குற்றம் சாட்டுவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த ஓகஸ்ட் மாதம், இரசாயன ஆயுதத் தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்ட நிலையில், மீண்டும் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுதொடர்பாக விசாரணை நடத்தப்போவதாக ஐ.நா. இரசாயன ஆயுத கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

# சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை; மனுவை வாபஸ் பெற்றார் ஜெயலலிதா

(புதுடில்லி)

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்குத் தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை தமிழக முதல்வர் ஜெயலலிதா திரும்பப் பெற்றுக் கொண்டார்.

இந்த விவகாரத்தில் அவரது மனு நிராகரிக்கப்படும் என நீதிமன்றம் கூறியது. இதைத் தொடர்ந்து, அவரது சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அந்த மனுவைத் திரும்பப் பெற்றார்.


1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தார். அப்போது அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக அவருக்கு பின் ஆட்சிக்கு வந்த கருணாநிதி தலைமையிலான திமுக அரசு வழக்குத் தொடர்ந்தது. பின்னர் இந்த வழக்கு விசாரணை உச்ச நீதிமன்ற உத்தரவின் படி பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது.

இந் நிலையில், லெக்ஸ் பிராப்பர்டீஸ் டெவலப்பர்ஸ் என்ற தனியார் நிறுவனத்தில் ஜெயலலிதா பங்குதாரராக இருந்ததாகக் கூறி அந் நிறுவனத்தின் சொத்துகள் முடக்கப்பட்டன. இந்த வழக்கையும் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் விசாரித்துவருகிறது. இவ் வழக்கின் விசாரணை இன்று நடைபெறவுள்ளது.

இச் சூழ்நிலையில், முடக்கப்பட்ட சொத்துகளை விடுவிக்க உத்தரவிடக் கோரியும் தங்கள் நிறுவனத்துக்கும் ஜெயலலிதாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத் தாக்கல் செய்ய அனுமதிக்கும்படி கோரியும் அந்நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

ஆனால், அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், லெக்ஸ் பிராப்பர்டீஸ் டெவலப்பர்ஸ் நிறுவனத்துக்கும் ஜெயலலிதாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றால், நீங்களே ஏன் வலியவந்து இதுபோன்ற மனுவைத் தாக்கல் செய்கிறீர்கள்? இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவுள்ளோம். அந்நிறுவன சொத்துகள் முடக்கம் தொடர்பான வழக்கில் கூடுதல் ஆவணங்களை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அனுமதிக்கிறோம். அந்த ஆவணங்களை பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டியது சிறப்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டது என்று கூறி விசாரணையை முடித்து வைத்தனர்.

இதையடுத்து, ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கிரி, எனது மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டாம் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்றார். அதற்கு நீதிபதிகள் அனுமதி அளித்தனர்.




ஐரோப்பிய தலைநகர் புருசெல்ஸ் நகரில் நடந்த பத்திரிகை[illegible] ஜனாதிபதி (வலது) மற்றும் உக்ரைன் நாட்டின் பிரதமர் இருவரும் கூட்டாக பேட்டியளித்ததை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு தோறும் பாக். இருந்து 5 ஆயிரம் இந்துக்கள் வெளியேற்றம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இந்துக்கள் சிறுபான்மையாக உள்ளனர். அவர்கள் சிந்து மாகாணத்தில் பெருமளவில் வசிக்கின்றனர். அங்கு அவர்கள் மீது சமூக விரோதிகளும், தீவிரவாதிகளும் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடத்தல், வழிப்பறி, பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற சம்பவங்களை நடத்தி மிரட்டி வருகின்றனர்.

அங்குள்ள இந்து கோவில்கள் தீயிட்டு எரிக்கப்படுகின்றன. சுவாமி சிலைகள் உடைக்கப்படுகின்றன.

எனவே, தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு பயந்து ஆண்டு தோறும் பாகிஸ்தானில் இருந்து 5 ஆயிரம் இந்துக்கள் வெளியேறி வருகின்றனர்.

இந்த தகவலை ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ் பிரிவு) எம்.பி. ரமேஷ்குமார் வாங்வானி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது,

இந்துக்களை தீவிரவாதிகள் தொடர்ந்து மிரட்டி வருகின்றனர்.

சிந்து மாகாணத்தில் கடந்த 2 மாதத்தில் மட்டும் 6 சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் பாகிஸ்தானில் பாதுகாப்பு இல்லை என இந்துக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கு சென்று தஞ்சம் அடைகின்றனர் என குற்றம் சாட்டினார்.

# மரண தண்டனையை மீளவும் அமுல்படுத்த வேண்டும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



மரண தண்டனையை மீள வும் அமுல்படுத்த வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்று வரும் பாரியளவிலான குற்றச் செயல் களை கட்டுப்படுத்த உச்சபட்ச தண்டனை அறிமுகம் செய்யப்பட வேண்டியது அவசியமானது. மரண தண்டனையின் மூலம் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும்.

இதேவேளை, அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரதானிகளை சந்தித்த போது மரண தண்டனை அமுல்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மரண தண்டனையை அமுல்படுத்துவது அவசியமானது என்ற போதிலும் அப்பாவிகள் தண்டிக்கப்படக் கூடாது என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் மரண தண் டனை அமுல்படுத்தப்படமாட்டாது என அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றிய த்திற்கு உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# உளவு பார்த்த இலங்கையருக்கு விளக்கமறியல் நீடிப்பு

பாகிஸ்தான் புலனாய்வு பிரிவுக்காக இந்தியாவில் உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சென்னை நீதிமன்றம் நேற்று முன்தினம் அவருக்கான விளக்கமறியல் தண்டனையை 15 நாட்களுக்கு நீடித்தது.

37 வயதான இலங்கையரான சகீர் ஹூசைன் என்பவர் நேற்று முன்தினம் வீடியோ மாநாடு மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

சிறையில் உள்ள கைதி ஒருவருக்காக இந்த வீடியோ மாநாடு ஆஜர் முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று உதவி அரச சட்டத்தரணி எஸ். திராவியராஜ் மன்றில் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரத்துக்காக ஹூசைன் இந்தியாவில் உளவாளியாக செயற்பட்டதாக குற்றம் சுமத் தப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (அ)

# வெசாக் வழிபாடுகளில் 30 இலட்சம் மாணவர்கள்

(கொழும்பு)

வெசாக் பண்டிகையையொட்டி நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் இடம்பெற்ற சமய வழிபாட்டு நிகழ்வுகளில் 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

தேசிய, மாகாண மட்ட பாடசாலைகளில் கல்வி அமைச்சின் ஏற் பாட்டில் இந்த சமய நிகழ்வுகள் நடைபெற்றதுடன் கொழும்பிலுள்ள பல பாடசாலைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக விஜயம் செய்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

கல்வியமைச்சர் பந்துல குணவர்தனவும் ஜனாதிபதியுடன் இந்நிகழ்வு களில் கலந்துகொண்டுள்ளார்.

பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்களின் பெற் றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரும் ஒன்றி ணைந்து இந்த சமய நிகழ்வுகளை நடத்தினர். (அ)


# பிரிவுத்துயர் பகிர்வு



திருமதி இராசையா
**ஜெயமணி**

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு செங்கலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஜெயமணி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு செங்கலடி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



திருமதி லெஸ்லி பிரான்ஸிஸ்
**பெர்னடேத்**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் ஏஜக்ஸ் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லெஸ்லி பிரான்ஸிஸ் பெர்னடேத் கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை கனடா ரொரண்டோவில் நடைபெறும்.



திருமதி சிவனடியார்
**மகாலட்சுமி**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவனடியார் மகாலட்சுமி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# இனப்பிரச்சினையை தீர்க்காவிட்டால் லிபியா, எகிப்தின் நிலையே ஏற்படும்

## சிரேஷ்ட அமைச்சர் டியூ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் பிரச்சினையை நாமே தீர்த்து கொள்ளவில்லை என்றால் பிரச்சினை அதிகரிக்கும் எனவும் லிபியா மற்றும் எகிப்து நிலைமைகள் இதனையே சுட்டிக் காட்டுவதாகவும் சிரேஷ்ட அமை ச்சர் டியூ. குணசேகர தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கையின் பிரச்சினை ஒன்று தற்போது வெளிநாடுகளுக்கு சென்றுள்ளது.

எமது அரசியல் தலைவர்கள் இந்த பிரச்சினையை தீர்க்க வெளி நாடுகளுக்கு செல்கின்றனர்.

நாட்டின் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்தால், இந்த பிரச்சி னையை தீர்க்க முடியும்.

நாட்டின் சுதந்திரத்திற்கு பின் னர், தேசிய பிரச்சினை தொடர்பில் தீர்வை காண நாட்டில் சகல அர சியல்கட்சிகளுக்கு தெரிவுக்குழுவென் றுக்கு வர முடியாது போயுள்ளது.

நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பில் பொது இணக்கத்திற்கு வந்து உரிய அரசியல் அமைப்பு மாற்றங்களை செய்து மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்.

இதனை செய்ய முடியாத காரண த்தினால், அந்த பிரச்சினை ஒவ் வொரு இடங்களுக்கு சென்றுள் ளது.

அத்துடன் தேசியப் பிரச்சினை தற்போது சர்வதேசமயமாகியுள் ளது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காணாது போனால், சர்வதேச சக்திகள் நாட்டுக்குள் பிரவேசிக்கும். அதனை தடுக்க முடியாது போகும்.

இதனை நாம் லிபியாவிலும் எகிப்திலும் சிரியாவிலும் கிரிமீயா விலும் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் பார்த்துள்ளோம்.

இதன் காரணமாக, அண்மை கால வரலாறு அனுவங்களை கவனத்தில் கொண்டு தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இடதுசாரிகள் கட்சிகள் அன்றைய காலத்தில் இருந்து இன்று வரை நாட்டின் தேசிய ஐக்கியத்திற்காகவே பணியாற்றி வருகிறது.

நாட்டை ஐக்கியப்படுத்தும் பிரச் சினையில் எந்த கட்சிபுடனும் நாம் இணைந்து எந்த பேதங்களும் இல்லாது செயற்படுவோம்.

நாட்டில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதே இடதுசாரி கட்சி களின் அடிப்படை நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இயற்கை சக்திகளை நன்றியுடன் போற்றுவோம்

மக்கள் வாழ்விற்கு உறுதுணை யான இயற்கை சக்திகளை நன்றியுடன் போற்றி வழிபட்டும் பெருமைப்படுத்தியும் வருபவர் கள் எம் மக்கள், இந்த விதத்திலே ஐம்பூதங்களாக நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றை யும் இவற்றின் இன்றியமை யாத தேவைகளையும் இவற் றால் ஏற்படும் இயற்கை மாற் றங்களையும் தெரிந்து, அறிந்து அவ்வப்போது ஏற்படக்கூடிய சாதகமான, பாதகமான விளைவுகளையும் சமய, சாஸ் திரங்களுடனும் ஒப்பு நோக்கி வாழும் வாழ்க்கை முறைகள் தமிழ் மக்களுக்கே தனித்துவ மானதாகும்.

வருடந்தோறும் வரும் பன்னிரு மாதங்கள், திதி, வார, நட்சத்திரங்கள், யோகங்கள், கரணங்கள் என்பவற்றைப் பகுத்து இவற்றால் ஏற்படக் கூடிய இயற்கையான தாக்கங் கள் மக்களுக்குத்தரக் கூடிய சாதகமான, பாதகமான விளைவு களை அறிந்து, தெரிந்து வாழ்வை வகுத்துக்கொள்ளக் கூடியதான வழிவகைகளை நம் ஆன்றோர் நெறிப்படுத்தியுள்ளனர்.

இந்த விதத்திலே தான் ஆண்டுதோறும் சித்திரை மாத நடுப்பகுதியிலிருந்து வைகாசி மாத நடுப்பகுதிக்கு உட்பட்ட சூரியன் உச்சம் பெற்று வெப்பம் கூடியகாலம் அக்கினிநாள் என வும் காண்டாவன காலம், கத்தரி வெயிற் காலம் என சூரிய உஷ்ணம் மிகுதியான காலமாக வும் இக்காலத்தில் மக்கள் தம் வாழ்வியலுக்கான சுபகாரியங் களைச் செய்யாது இயற்கையைப் பணிந்து வாழிபாடுகள் செய்து வாழ வேண்டுமென முன்னோர் வகுத்துள்ளனர்.

இன்றைய உலகில் விஞ் ஞான வளர்ச்சியால் பல்வேறு மாறுதல்கள், மாற்றங்கள் காண ப்பட்டாலும் எம் மக்கள் அன்று தொட்டு இன்று வரை மதிக்கும் இயற்கைச் சக்திகளை முற்று முழுதாக மாற்ற முடியாதிரு ப்பது விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானமே உயர்வானது என்பதை உணர்த்துவதாக வுள்ளது.

ஆண்டுதோறும் வரும் இயற்கையுடன் இணைந்த பருவகாலங்களை எம் முன் னோர் உத்தராயணம், தெட்சணா யனம் எனவும் நால் வகை கருத்துக்களாகவும் மாதந் தோறும் வளர்பிறைக் காலம், தேய்பிறைக் காலம் எனவும் சிறப்பாக வகுத்து அவை மக்களுடைய வாழ்வியலிற் செய்யக்கூடிய தாக்கங்கள் பற்றியும் சிறப் பாகக் குறிப்பிட்டுள்ளமையும் விஞ்ஞானிகளாலும் இன்று வரை இவற்றைத் திறமையாக தாம் நினைத்தபடி அடக்கியாள முடியாதிருப்பதும் இயற்கைச் சக்திகளின் தனிப் பெருஞ் சிறப்பேயாகும்.

உலக வாழ்விற்கு இன்றி யமையாத இயற்கைச் சக்திகளை நாம் எவ்வளவு நன்றியுடன் மதித்துப் போற்றுகின்றோமோ அதற்கேற்பவே அவை எமக் கும் உதவும் என்பதில் ஐய மில்லை. விஞ்ஞானத்தால் எதையும் சாதிக்கலாம் என எண்ணி மெய்ஞ்ஞான வழியான இயற்கையை உதாசீனம் செய் வதால்தான் எதிர்பாராத இயற் கையின் சோதனைகளுக்கு உல கம் ஆளாகின்றது.

எனவே, இயற்கையுடன் இணைந்த இன்றைய அக்கினி நாள் காண்டாவன காலம் பற்றி யும் மனத்திருத்தி இயற்கை அன் னையைப் பணிவோமாக.

— நீர்வைமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது இடங்களில் புகைபிடிப்பு; மக்கள் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொது இடங்களில் புகைத்தல் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொது இடங்களில் புகைபிடிப்பது தவறான விடயமாகும்.

எனினும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில உணவகங்கள் பொதுச் சந்தை மற்றும் பொது இடங்க்ளிலும் புகைப்பிடித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பாக சில உணவகங்களில் உணவு பரிமாறுபவர்கள், உரிமையாளர்கள் போன்றோர் புகைபிடித்துக் கொண்டே பணிகளில் ஈடுபடுகி ன்றனர்.


எனவே, சம்பந்தப்பட்டோர் இச் செயற்பாட்டினை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-27)

# தலைமன்னாரில் புகையிரத பகுதியிலுள்ள குடும்பங்களை வெளியேறக் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் ஸ்ரேசன் பகுதியில் வாழ்ந்து வரும் சுமார் 22 குடும்பங்களையும் 14 நாட்களுக்குள் குறித்த பகுதியில் இருந்து வெளியேற வேண்டும் என புகையிரத திணைக்கள அதிகாரிகள் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, தலைமன்னார் ஸ்ரேசன் பகுதியில் புகையிரத நிலையத்திற்கு சொந்தமானது என கருதப்படும் குறித்த பகுதியில் சுமார் 40 தொடக்கம் 45 வருடங்களுக்கு மேலாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். குறித்த காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்களும் உள்ளனஇங்குள்ள 22 வீடுகளில் பல வீடுகள் நிரந்தரமான வீடுகள்,ஒரு சில வீடுகள் தற்காலிக கொட்டில்கள்.



அத்தோடு அரச சார்பற்ற அமைப்புக்களினால் ஏற்கனவே வீட்டுத்திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் புகையிரத தலைமையகத்தினால் தலைமன்னார் ஸ்ரேசன் கிராம அலுவலகர் ஊடாக கடந்த திங்கட்கிழமை 22வீடுகளிற்கும் புகையிரத காணியல் அனுமதியில்லாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்பை அகற்றிக்கொள்ளுமாறு அறிவித்தல் எனும் தலைப்பிலான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள ளது.

அக்கடிதத்தில் புகையிரத திணைக்களத்திற்குரிய காணியை அனுமதியின்றி கைப்பற்றி பயன்படுத்துவதாக எமக்கு அறிவித்தல் கிடைத்துள்ளது

எனவே இக்காணிகளில் அமைகப்பட்டுள்ள வீடுகளை அகற்றி 14 நர்ட்களுக்குள் வெளியேற வேண்டும் அல்லது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 40 முதல் 45 வருடங்களுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக மக்கள் வாழ்ந்து வருகின்ற குறித்த காணியில் இருந்து எங்களை எழும்பிச் செல்லுமாறு கூறினால் நாங்கள் எங்கு செல்வது என அந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, இக்காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வைப்பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்டமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

பரந்தன்–பூநகரி வீதியில் சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இப் பணம் பரந்தன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும் குஞ் சுப் பரந்தன் சந்திக்கும் இடையி லுள்ள வீதியில் கடந்த 8 ஆம் திகதி வியாழக்கிழமை கண்டெடுக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் சிவநகர் கிராம சேவையாளருக்கும்தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, பணத்தை தவற விட்டவர்கள் உரிய ஆதாரத்தை காட்டி 077 7524090 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பணத்தை பெற்றுக் கொள்ள முடியும். (9-254)

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்த முதிரை மரத்தினால் செய்யப்பட்ட யன்னல்களை திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும் எதிர் வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லை. மாவட்ட நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் னர் முள்ளியவளைப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து முதிரை மரத்தினால் செய்யப்பட்ட யன்னல்கள் திருடப்பட்டுள்ளன.


இவ்வாறாக திருடப்பட்ட யன்னல்களை புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள ஒருவருக்குவிற்பனைசெய்துள்ளனர்.

இது தொடர்பில் வீட்டாரினால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தேகத்தின் பேரில் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்விரு சந்தேக நபர்களையும் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (9-250)




# வவுனியா மதீனா நகர் பாடசாலையில் திருட்டு



வவுனியா, மதீனா நகர் வித்தியாலயத்தில் கடந்த திங்கள் இரவு புகுந்த திருடர்கள் கதவுகளை உடைத்து பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், உப அதிபரின் அலுவலகம், விஞ்ஞான ஆய்வு கூடம்உள்ளிட்ட மூன்று அறைகளின கதவுகளை உடைத்து உடைத்த அறை ஒன்றில் இருந்த சாவிகளை எடுத்து நூலகம், அதிபரின் அலுவலகம் உள்ளிட்ட மூன்று அறைகளை திறந்துள்ளனர்.

அறை ஒன்றில் இருந்து சவுண்ட் பொக்ஸ், அம்பியர் வயர் உளளிட்ட இலத்திரனியல் பொருட்களை திருடிச் சென்றுள்ளதுடன் அங்கு இருந்த கணனியை பை ஒன்றினால் சுற்றி வைத்து அதை எடுக்காமல் சென்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அங்கு வந்த வவுனியா பொலிஸார் தடயங்களை பெற்றுக் கொண்டதுடன் மோப்ப நாய்களின் உதவியுடன் திருடர்கள் பற்றிய தகவல்களை அறிய முற்பட்டனர். அதன் போது ஓடிச் சென்ற மோப்ப நாய் அண்ணாநகர் சந்தியில் போய் படுத்ததாகவும் அதற்கு அப்பால் செல்லவில்லை எனவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். (9-250)

# கால்வாய் நோயை கட்டுப்படுத்த நான்கு வாரங்கள் தேவை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கால்வாய் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இன்னும் 4 வார காலம் தேவைப்படுமென கால்நடை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

கால்வாய் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நேற்று முன்தின்ம் இடம்பெற்ற போதே வைத்தியர்களால் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலும் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கால்வாய் நோய் தாக்கம், மன்னாரிலும் இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி மடுப் பிரதேசத்தில் முதலில் இனங் காணப்பட்டது. இதனை அடுத்து, மன்னார் மாவட்டத்தில் மாடுகளை வெட்டுவதற்கும் மாட்டிறைச்சிப் பயன்பாட்டிற்கும் சுமார் 2 மாதங்களாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந் நோயால் சுமார் ஆயிரம் கால்நடைகள் மன்னாரில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் சில இறந்துள்ளதாகவும் கால்நடை வைத்தியர்கள் மேலும் தெரிவித்தனர்.(9-250)

# சங்கிலி அறுப்பு; யுவதி காயம்

(குருமன்காடு)

வவுனியாவில் மோட்டார் சைக் கிளில் சென்ற பெண்களின் சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளதாக வவு னியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் வவுனியா நகரில் இருந்து உக்கிளாங்குளம் வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு யுவதிகளை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் அவ் யுவதிகளில் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனால் நிலை தடுமாறிய யுவதிகள மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந் துள்ளனர்.இதில் ஜெகதீஸ்வரன் ஜெயப்பிரியா (வயது 30) என்ற பெண் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதன் பின் அதே தினம் பிற்பகல் நான்கு மணியளவில் செட்டிகுளம் வாரிக்குட்டியூர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதியை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் அப் பெண் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள் ளனர்.

இவ்விரு நகை பறிப்பு சம்பவங் களிலும் கறுப்பு நிற மோட்டார் சைக்கிள்பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் கறுப்பு ஜெக்கற் அணிந்து கறுப்பு கண் ணாடி பொருந்திய ஹெல்மட் அணி ந்து வந்த இளைஞர்களே ஈடுபட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# விளக்குவைத்தகுளம் -கொந்தக்குளம் ஆற்றுப்படுக்கை சீர் செய்யப்படும்



கடந்தகால போர் நடவடிக்கை களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

அத்தோடு இராணுவ வேலிகள் பாதுகாப்பு அரண்கள் இவ் ஆற்றுப்படுக்கைக்கு குறுக்காகவும் நீண்ட கால பராமரிப்பு இன்மையால் பற்றைக்காடுகளும் மணல் திட்டுகளாலும் மூடி நீர் வரத்து தடைப்பட்டது.

ஓமந்தை விளக்கு வைத்த குளத்தின் மேலதிக நீர் வெளியேறி கொந்தக்காரன், குளத்திற்கு செல்லும் ஆற்றுப் படுக்கை வடமாகாண சபை உறுப்பினர் இந்திரராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியினூடாக மீண்டும் ஆரம்பித்து தருவதாக உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

ஓமந்தை விளக்கு வைத்த குளத்திலிருந்து கொந்தக்காரன் குளத்திற்கு செல்லும் ஆற்றுப்படுக்கை

இதனால் கொந்தக்காரன் குளம் செட்டி ஊர் குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவ் ஆற்றுப்படுக்கை தூர்வாரப் படவேண்டியதன் அவசியத்தை வடமாகாண சபை உறுப்பினர் இந்திரராசவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, அதனை சீர்செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். (9-250)

## நீர் வரி இடாப்பு வேலைத்திட்டம் இன்றுடன் நிறைவடைகின்றது

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தின் கீழான நீர் வரி இடாப்புக்களை பதிவு செய்தல் புதுப்பித்தல் தொடர்பான வேலைத் திட்டம் இன்றுடன்முடிவடையவுள்ளது.

இவ் வேலைத்திட்டம் கடந்த வாரம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதன்படி வேலைத்திட்டங்கள் யாவும் இன்றுடன் நிறைவடையவுள்ளதனால் உரிய படிவங்களை பூரணப்படுத்தி ஆவணங்களை கமக்கார அமைப்புக்களிடம் ஒப்படைக்குமாறு உருத்திரபுர கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தின் வாழ்வுதன்னை சூதுகௌவும்
தர்மம் மறுபடியும் வெல்லும்.
- பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூதாட்டத்தில் தோற்றுப்போன பாண்டவரின் நிலையில் தமிழர்

பாண்டவர்களை வெல்ல முடியாதென்ற நிலையில் சூதாட்டமே ஒரேவழி என சகுனி மாமா கூற, அதனைத் துரியோதனன் நல்ல உபாயமாக ஏற்றுக்கொள்கிறான்.

பகடையை தான் நினைத்தவாறு உருட்ட, உருள வைக்கக்கூடிய சகுனி, துரியோதனனுக்காக பகடையை உருட்ட அதில் தருமர் தோல்வி காண்கிறார். தோல்வியென்றால் அப்படி இப்படியான தோல்வியல்ல.

தன் சொத்து, சுகம் எல்லாவற்றையும் பறிகொடுத்த தருமர் தன் சகோதரர்களை சூதாட்டத்தில் தோற்கின்றார். பின்னர் தன்னைத் தோற்கிறார். ஈற்றில் பத்தினி திரௌபதையை தோற்கின்றார். இங்குதான் திரௌபதையின் நியாயபூர்வமான கேள்வி எழுகிறது.

அதாவது, தருமர் தன்னைத் தோற்றபின் என்னை தோற்றாரா? அல்லது என்னைத் தோற்றபின் தன்னைத்தோற்றாரா? என்ற சட்நுட்பம் சபையை அதிர்ச்சிக்கு ஆளாக்குகிறது.

கேள்வி நியாயங்கள் எதுவுமே கௌரவர் மத்தியில் செல்லுபடியற்றதாகிப் போகிறது. அவையோர் முன்னிலையில் திரௌபதையின் துகிலை களையுமாறு துரியோதனன் கட்டளையிட, துச்சாதனன் அந்த ஈனச் செயலைச்செய்ய, திரௌபதை கண்ணா... கண்ணா... என்று கதறுகிறாள். கண்ணன் திரௌபதையின் மானம் காக்கிறான்.

அந்தோ! என்னே! அநியாயம். நாடிழந்து, சொத்திழந்து, சொந்தம் உறவு சோதரர் என அனைத்தும் இழந்து காடு செல்லும் கட்டத்தில் பாண்டவர்கள் நிற்கின்றனர்.

பாண்டவர்களின் பதைபதைப்பில் துரியோதனன் கர்ச்சிக்கின்றான். ஏளனம் செய்கின்றான். இங்குதான் அதர்மம் அழிவதற்கும் தர்மம் வாழ்வதற்குமான உடன்படிக்கையில் இறைவன் கைச்சாத்திடுகிறான்.

சூதாடி தருமரின் செல்வங்களை அபகரித்த - அழித்த துரியோதனன், திரௌபதையை மானபங்கப் படுத்தாமல் விட்டிருப்பானாயின் கிடைத்த ஆட்சியை தக்கவைத்திருப்பான்.

என்ன செய்வது? அவனின் அகந்தை தருமரை ஏளனம் செய்கிறது. பாண்டவர்களைப் பரிகசிக்கிறது. அவர்களை வனம் செல்லப் பணித்த துரியோதனன் பாண்டவர்களின் மௌனமான வாழ்க்கைக்கும் களங்கம் விளைவிக்கத் தயங்கவில்லை.

ஈற்றில் குருசேத்திரப் போரில் கௌரவர் சேனை அழிகிறது. துரியோதனன் மட்டும் கொல்லப்பட்டான் அல்ல. துரியோதனனோடு இருந்த வீஷ்மர், துரோணர், அசுவத்தாமன் என்ற நல்ல மனிதர்களும் கொல்லப்பட்டனர்.

துரியோதனனோடு சேர்ந்தது மட்டுமல்ல, அவனுக்கு நீதியை எடுத்துக் கூறாததன் காரணமாகவும் இவர்கள் மாளவேண்டியதாயிற்று.

இந்தக் கதை எங்கள் நாட்டிற்கும் நல்ல பொருத்தம். இப்போது பாண்டவர்களின் நிலையில் தமிழர்கள் இருக்கின்றனர். அவர்கள் இழப்புக்களின் துயரங்களை மனத்திற்குள் அடக்கி மௌனமாக வாழ நினைக்கின்றனர்.

ஆனால், அவர்களைச் சீண்டும் நிகழ்வுகள் வடபுலம் எங்கும் பரவிக்கிடப்பது கடும் தடிப்பின் கட்டளைகள் போல் இருக்கின்றன.

எதுவாயினும் இறைவா! நமக்குத் தெரிவதெல்லாம் சூதாட்டத்தின் இறுதியில் சகாதேவனுக்குத் தெரிந்த சோதிடம்தான்.

# தமிழகத்திலுள்ள அகதிகள் எவரையும் நாடுகடத்த அனுமதிக்க முடியாது

## ராமதாஸ் அறிவிப்பு

(சென்னை)

தமிழக பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட அகதிகளில் கதிர்வேலு தயா பரராஜா, உதயகலா ஆகிய இருவரையும் சர்வதேச பொலிஸாரின் (இன்டர் போல்) உதவியுடன் கைது செய்ய இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ் அகதிகளை இன்டர்போல் பொலிஸார் கைது செய்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் இராணுவத்தால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்துள்ள நிலையில், உயிர்பிழைப்பதற்காக கடந்த 5 ஆம் திகதி தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்திற்கு வந்த ஐந்து குழந்தைகள் உள்ளிட்ட 10 அகதிகளை தமிழக பொலிஸார் கைது செய்து புழல் சிறையில் அடைத்துள்ளனர். மனித உரிமையை மீறிய இந்த நடவடிக்கையை அப்போதே கண்டித்திருந்தேன்.

அந்த அகதிகளில் கதிர்வேலு தயா பரராஜா, உதயகலா ஆகிய இருவரும் யாழ்ப்பாணம்,. கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளில் பண மோசடி செய்திருப்பதாகவும், அதற்காகவே அவர்களை இன்டர்போல் உதவியுடன் இலங்கை அரசு கைது செய்யவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தப்பி வந்த அப்பாவி அகதிகளை நிரூபிக்கப்படாத புகாரின் அடிப்படையில் துரத்தி, துரத்தி கைது செய்ய இலங்கை அரசு துடிப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

எனவே, தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர்களை சர்வதேச பொலிஸார் மூலம் நாடு கடத்த முயலும் இலங்கையின் திட்டத்திற்கு இந்தியா ஒருபோதும் துணை போகக் கூடாது.

தமிழகத்திலுள்ள அகதிகளை அவர்களின் விருப்பமில்லாமல் அவர்களின் நாட்டிற்கு அனுப்ப சம்மதிக்க மாட்டோம் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்றார். (எ-8)

# சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதில் தயக்கம் வேண்டாம்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதற்கு நீதவான்கள் தயக்கம் காட்டக் கூடாது என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியில் புதிய நீதிமன்றக் கட்டட அங்குரார்ப்பண வைபவத்தில் நேற்று பங்கேற்ற போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றை நாடும் நபர்களை கருணையுடன் பார்க்க வேண்டும்.

பண்டைய ரோம, பறங்கியர் அல்லது ஆங்கிலேயேரின் சட்டங்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கக் கூடாது.

இந்த சட்டங்கள் அந்தந்த நாடுகளில் கூட அப்படியே தற்போது அமுல்படுத்தப்படுவதில்லை.

நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படும் நபர்களில் பத்தில் ஒன்பது பேருக்கு பொலிஸ் பிணை வழங்க முடியும்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 22 ஆயிரத்து 600 க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பிலான 65 வீதமான வழக்குகள் இதுவரையில் விசாரணைக்குஎடுதது்கொள்ளபபட வேயில்லை. கைதிகளை பராமரிப்பதற்கு நாளொன்றுக்கு 700 ரூபாவிற்கு மேல் தேவைப் படுகின்றது.

சந்தேக நபர்கள் சிறையில் தடுத்து வைக்கப்படுவதனால் வீட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# முதன்முறையாக செய்மதி தொலைக்காட்சி சேவை

(கொழும்பு)

இலங்கையில் முதன்முறை யாக செய்மதி மூலமான தொலைக் காட்சி சேவை ஆரம்பிக்கப்படவு ள்ளது

கடந்த 30 வருட கால போரின் பின்னர் இலங்கை பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக இலக் குகளை உலகுக்கு அறிவிக்கும் வகையில் இந்த தொலைக்காட்சி சேவை ஒளிபரப்புகளை மேற் கொள்ளவிருக்கிறது.

செய்திகள் நடைமுறை விடயங்கள் நாடகங்கள் இசை நிகழ்ச்சிகள் இளைஞர் மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள் இதில் ஒளிபரப்பாகவுள்ளன. தெனித டிவி என்ற பெயரில் இந்த தொலைக் காட்சி செயற்படவுள்ளது.

இலங்கையில் இருந்து ஒளிபரப்பாகும் இந்த தொலைக்காட்சி சேவை ஆசியா, ஐரோப்பியா, மத்திய கிழக்கு மற்றும் அவுஸ்திரேலியா என்று 116 நாடுகளில் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்களுக்கு இலங்கையின் நிகழ்வுகளை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம ஆகிய மொழிகளில் இந்த சேவை வழங்கவுள்ளது. (அ)

# வகுப்புகள் நடைபெறாது

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா தரம் 1 (2014/2015) கற்கை நெறிக்கான வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 17,18ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது என இலங்கை நூலகச் சங்க ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (அ)

# மதுபானத்துடன் இருவர் கைது

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமின்றி 57 மது பானப் போத்தல்களை கொண்டு சென்றதாகக் கூறப்படும் உடுவில் ஆலடியைச் சேர்ந்த 28 மற்றும் 34 வயதுடைய இருவரை யாழ். மருதனார்மடம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கைது செய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.


இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

## சத்திய தரிசனம்



மனதின் இயல்பைப் புரிந்து கொண்டவனே உண்மையில் மேன்மையானவன். மனதின் வடிவம் என்ன? அது எங்கிருந்து ஆரம்பமாகிறது? அதன் இயல்பு என்ன? இவ்வாறு நாம் அதைப்பற்றிய விசாரணையில் இறங்க வேண்டும்.

மனதின் பரப்பு, அதன் விரிந்துகொண்டே செல்லும் எல்லை விபரிக்க முடியாது. ஒரு கணநேரத்தில் அதனால் எத்தனை தூரம் வேண்டுமானாலும் பயணப்படமுடியும். அதன் சக்தி விபரிக்க முடியாதது. மனிதனின் புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. மனதின் சக்தியின்றி எந்த ஒரு செயலையும் நம்மால் செய்ய முடியாது. மனதிற்கு வடிவம் இல்லை. அது ஆத்மாவின் சக்தியால் இயங்குகிறது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கடைப்பிடிக்க வேண்டியவைகள்






✦ உணவு உண்ணுவதற்கு முன் காகத்திற்கு ஒரு பிடி அன்னம் வைத்தல் நல்லது. காகம் ஸ்ரீ சனீஸ்வர பகவானின் வாகனம். எனவே, இப்படி உணவிடுவதன்மூலம் சனீஸ்வரனின் தீயபலன்கள் நம்மைத் தொடராது. நமது பித்ருக்கள் காகத்தின் வடிவில் வருவதாக ஐதீகம். எனவே காகத்திற்கு உணவிடுவது பித்ருக்களைத் திருப்திப்படுத்துவதாக அமைகிறது. மேலும் குடும்பத்தில் ஒற்றுமை வளர்ந்து அமைதி நிலவும்.

✦ கணவனும் மனைவியும் சகோதரர்களும் சகோதரிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். பிறந்துவிட்டோம் இனி பிறக்கப் போவதில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

✦ பூஜை அறையில் தெய்வப் படங்களை வடக்குப் பார்த்து வைக்கக் கூடாது. கிழக்குப் பார்த்துத்தான் வைக்கவேண்டும். இயலவில்லை என்றால் திருமாலை தெற்குப் பக்கம் பார்க்கவைக்கலாம். பிற தெய்வங்களை மேற்குப் பார்க்க வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ துடுப்பாட்ட போட்டி; யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கும் ராஜரட்டைப் பல்கலைக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 70 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

40 பந்துபரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக நடைபெற்ற மேற்படி போட்டி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழ்ற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 40 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.விதுஸன் 51, ஆர்.அச்சுதன் 46, ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ராஜரட்டை அணி சார்பாக நயனஜித், விக்னேஸ்வரன் தலா 3 இலக்குகளை வீழ்த்தினார்.

239 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ராஜரட்டை அணி 38.4 பந்துப் பரிமாற்றங்களில் 168 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஹெட்டியாராட்சி 54, ஹரணசேன 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக ஆர். அச்சுதன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இந்த சிநேகபூர்வப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக ராஜரட்டை பல்கலைக்கழகத்தின் ஹெட்டியாராட்சியும், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆர்.அச்சுதனும், சிறந்த களத தடுப்பாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எஸ். வைகுந்தனும் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆர்.அச்சுதனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயா சாதனை


க.நெப்தலியோசப்


அ.பவித்திரா


பா.நிதுர்சன்

கொழும்பு சுகதாச விளையாட்டு அரங்கில் அண்மையில் இடம்பெற்ற தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்கள் மூவர் சாதனை படைத்துள்ளனர்.

18 வயதுப் பிரிவில் க.நெப்தலியோசப் 3.96 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கம் பெற்றதோடு புதிய சாதனை படைத்துள்ளார்.

23 வயதுப் பிரிவில் செல்வி அ.பவித்திரா 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப்பதக்கம் வென்றார்.

மற்றும் இருபது வயதுப் பிரிவில் பா.நிதுர்சன் 2.90 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

க.நெப்தலியோசப் இதுவரை காலமும் 3.85 மீற்றர் ஆக இருந்த முன்னைய சாதனையை முறியடித்து 3.96 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார். (கு)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டிகள்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 9 பேர் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளன.

இதன்படி காலை 8 மணிக்கு கலைவாணி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அடுத்து 10 மணிக்கு மஹாவிஷ்ணு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குமரன் சுப்பக்கிங் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து பிற்பகல் 12.30 மணிக்கு சிறீவிநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கதிரொளி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு கச்சாய் சிறீமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

இறுதியாக பிற்பகல் 4 மணிக்கு விக்பூட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விவசாய திணைக்களம் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.


போட்டிகள் யாவும் உரிய நேரத்தில் ஆரம்பமாகவுள்ளதனால் அனைத்து கழகங்களும் உரிய நேரத்தில் சமுகமளித்து போட்டிகள் சிறப்பாக இடம்பெற பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-23)

## JPL

யுவர் பிரண்ட் பவுண்டேசனால் நடத்தப்படும் ஜப்னா பிரிமியர் லீக்கில் இன்று காலை 8 மணிக்கு பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து மதியம் 11 மணியளவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மூளாய் விக்டொரி விளையாட்டுக் கழகம் கள மிறங்கவுள்ளது.(க)


மிருசுவில பாரதி முனபளளி விளையாடடுபபோடடி நிகழவுகள அணமையில இடமபெறறபோது...


(படஙகள :- மானிபபாய செயதியாளர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்ஸர்கள், பவுண்டரிகள் என ஆர்ப்பரித்த ஹைதராபாத் அணிக்கு தக்கபதிலடி கொடுத்தது கிங்ஸ் XI

## தொடரில் 2-வது முறையாக 200 ஓட்டங்களை பதிலெடுத்தும் சாதனை





சிக்ஸர்கள். பவுண்டரிகள் என சவால் விடுத்த சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு தக்க பதிலடி கொடுதது வெற்றிவாகை சூடியது கிங்ஸ் லெவன் பஞ்சாப்.

7-வது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டித் தொடரின் 39-வது போட்டி பஞ்சாப் - ஹைதராபாத் அணிகளுக்கிடையில் ஹைதராபாத்தில் நேற்று நடைபெற்றது. போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி, ஹைதராபாத் அணியை முதலில் துடுப்பாட்டம் செய்யுமாறு பணித்தது.

இதன்படி ஹைதராபாத் அணியின் தொடக்க வீரர்களாக அணித் தலைவர் தவானும், பிஞ்சும் களமிறங்கினர்.

இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஆட்டத்தின் முதல் பந்திலேயே பவுண்டரி அடித்து தனது ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார் பிஞ்ச், மறுபுறத்தில் தவான், சந்தீப் சர்மா வீசிய ஆட்டத்தின் 5-வது ஓவரில் 4 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் விளாசி அசத்தினார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 65ஆக இருந்த போது சிவம் சர்மா பந்துவீச்சில் பிஞ்ச் போல்டானார். தொடர்ந்து 12-வது ஓவரில் தவானும் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நமன் ஓஜாவும் பஞ்சாப் அணியின் பந்துவீச்சை சிதறடித்தார். அவர் சிவம் சர்மா வீசிய ஆட்டத்தின் 13-வது ஓவரில் தொடர்ந்து இரண்டு சிக்ஸர்கள் விளாசி அசத்தியதுடன், பட்டேல் வீசிய 16-வது ஓவரிலும் தொடர்ந்து இரண்டு பவுண்டரிகளை விளாசி அசத்தினார். ஓஜாவுடன் 3-வது விககெட்டுக்காக இணைந்த வோர்னரும் தன் பங்குக்கு பந்துகளை எல்லைக்கோட்டுக்கு அப்பால் விரட்டினார். பட்டேல் வீசிய ஆட்டத்தின் 18-வது ஓவரில் இரண்டு சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரி அடித்தார்.

இவ்வாறு அதிரடியாக ஆடி 23 பந்தில் 44 ஓட்டங்களை குவித்த வோர்னர் துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டானார். அடுத்து களமிறங்கிய ஹென்றிக்கஸ் டக் அவுட்டானார்.

5-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய பதானும் ஓர் ஓட்டத்தில் நடையைக் கட்டினார். 2-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஓஜா 36 பந்துகளில் 79 ஓட்டங்களை குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இதில் 4



பவுண்டரிகளும், 7 சிக்ஸர்களும் அடங்கும்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஹைதராபாத் அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 205 ஓட்டங்களை குவித்தது.

206 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய பஞ்சாப அணிக்கு சேவாக்கும், வோராவும் ஆரம்பம் கொடுத்தனர். ஆட்டத்தின் முதல் பந்தில் பவுண்டரி அடித்த சேவாக் அடுத்த பந்திலேயே அவுட்டாகி நடையைக் கட்டினார். அடுத்து களமிறங்கிய சகா, வோராவுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் ஹைதராபாத் அணி வீரர்களின் பந்துவீச்சை துவம்சம் செய்தனர். இவர்கள் அடித்த பந்துகள் அனைத்தும் சிக்ஸர்களாகவும், பவுண்டரிகளாகவும் பறந்த வண்ணமாகவே இருந்தன. இதனால் 7-வது ஓவரின் முடிவிலேயே பஞ்சாப் அணி 95 ஓட்டங்களை எட்டியது. 8-வது ஓவரின் முதல் பந்தில் சகா 26 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்து ஸ்ரம்ப் அவுட் ஆகி வெளியேறினார்.

இதனையடுத்து 3-வது விக்கெட்டுக்கு மக்ஸ்வெல் களமிறங்கினார். இவரும் தன் பங்குக்கு பந்துகளை எல்லைக்கோட்டை நோக்கி விளாசித் தள்ளினார். ஆட்டத்தின் 10-வது ஓவரை புவ்னேஸ்வர் குமார் வீசிய போது மக்ஸ்வெல் அடித்த பந்து புவ்னேஸ்வர் குமாரின் கையில்பட்டு பந்துவீச்சு முனையில்இருந்த ஸ்ரம்ப்பை தாக்கியது. அதன்போது க்ரீசை விட்டு வெளியே நின்ற வோரா



துரதிர்ஷ்டவசமாக 47 ஓட்டங்களில் ரன் அவுட்டானார்.

பின்னர் 4-வது விக்கெட்டுக்கு மல்லர் களமிறங்கினார். மக்ஸ்வெல் தொடர்ந்து தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டிருந்த நேரத்தில் 14-வது ஓவரில் மக்ஸ்வெல் ஆட்டமிழந்தார். பின்னர் 5-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய பெய்லி முதலில் ஓட்டங்களை எடுக்கத் தவறினாலும் பின்னர் சுதாகரித்து அதிரடியாக ஆடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

19-வது ஓவரின் 4-வது பந்தில் பஞ்சாப் அணி வெற்றி இலக்கை 6 விக்கெட்டுக்களால் எட்டியது.

களத்தில் மில்லர், பெய்லி ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 24, 35 ஓட்டங்களை எடுத்தனர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக பஞ்சாப் அணியின் சகா தேர்வானார்.

# கொல்கத்தா அணிக்கு 5-வது வெற்றி



ரொபின் உத்தப்பாவின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் மும்பை அணிக்கு எதிரான ஐ.பி.எல் போட்டியில் கொல்கத்தா அணி 8 பந்துகள் மீதமிருக்கையில் 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

7-வது ஐ.பி.எல் தொடரின் 40-வது போட்டி மும்பை - கொல்கத்தா அணிகளுக்கு இடையில் நேற்று கட்டாக்கில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரோகித் சர்மா 51 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தார்.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் மோர்னி மோர்கல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


142 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ரொபின் உத்தப்பாவின் அதிரடி அரைச்சதம் கைகொடுக்க 18.4 ஓவர்களில் 4 விககெட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றியிலக்கை 6 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய உத்தப்பா 52 பந்துகளில் 80 ஓட்டங்களைக் குவித்தார்.

மும்பை அணியின் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவ்வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி தொடரில் தனது 5-வது வெற்றியைப் பதிவு செய்ததுடன் புள்ளிப் பட்டியலில் 4-வது இடத்தை தக்கவைத்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணியின் ரொபின் உத்தப்பா தெரிவானார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே நாட்டி...

யத்தின் 65ஆவது ஆண்டுவிழா நேற்று புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் , சன சமூக நிலைய மைதானத்தில் யாழ்.மாநகரசபை சனசமூக நிலையங்களின் தலைவர் க.நாகேந்திரம் தலைமையில் இடம்பெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இன்று சிங்கள பௌத்தர்களின் புனித நாள். அமைதியாக தர்ம சிந்தனைகளோடு வாழும் வழிமுறையை உலகிற்கு வழங்கியதில் பௌத்தத்திற்கு முக்கிய இடம் உண்டு. ஆனால் அதன் வழி வந்தவர்களாகத் தங்களைக்கூறிக் கொள்ளும் ஆட்சியாளர்கள் எவ்வாறு நடந்து வந்திருக்கின்றார்கள், எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைத் தான் நாங்கள் அனுபவ ரீதியாக கண்டு கொண்டிருக்கின்றோம்.

கடந்த 66 ஆண்டு களுக்கும் மேலாக ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் உண்மையான பௌத்த சிந்தனைகளுடன் முற்று முழுதாக முரண்பட்டு வருகின்றன. பௌத்த சிந்தனைகளை போதித்த புத்தபகவான் இன்று இருந்திருந்தால், தனது கொள்கைகளைப் பின்பற்றுவதாகச்சொல்லும் ஆட்சியாளர்கள் செய்யும் அக்கிரமங்களைப்பார்த்து தானாகவே வெட்கித்தலைகுனிந்திருப்பார்.

இந்த மே மாதம் பௌத்தர்களுக்கு எவ்வாறு முக்கியத்துவமானதோ, புனிதமானதோ, அவ்வாறே தமிழர்களாகிய எங்களுக்கும் மிகவும் புனிதமானதும், உணர்வு பூர்வமானதுமான மாதமாகும். அதுவும் இந்த வாரம் மிகவும் உணர்வு பூர்வமான வலி சுமந்த வாரமாகும்.

கடந்த இறுதிப்போரிலே இலட்சக்கணக்கில் , கடற்கரை ஓரத்தில் கொன்று குவிக்கப்பட்டதொரு மாதமாகும். அதில் கொல்லப்பட்ட மற்றும், காயமடைந்த எமதுமக்களின் உறவினர்கள் இன்று அவர்களை நினைத்து ஒருசொட்டு கண்ணீர் கூட விட முடியாதபடி, அரசாங்கம் அவர்களை அச்சுறுத்திவருவதுடன், தெற்கில் எமது மக்களின் அவலங்களின் மேல் பெறப்பட்ட இராணுவ வெற்றியை கோஷங்களுடன் கொண்டாடுவதுடன், பாதிக்கப்பட்ட எமது மக்களையும் அதைக் கொண்டாடுமாறு பலாத்காரமாக நிர்ப்பந்தித்து வருகின்றது.

இந்த விடயமானது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒரு நிலையாகும். இது பௌத்த மதம் கூறும் போதனைகளுக்கு எவ்வித்ததிலும் ஒவ்வாத ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.மோகனதாஸ், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் எம்.இளம்பிறையன்ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பல கலைநிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். (எ-6)

## சுவாமி சித்ரூபா...

தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவரின் இயற்பெயர் இரத்தினசபாபதியாகும்.

கொழும்பு கிருளப்பனையில் பிறந்த இவர் தனது 4 வயதில் வடமராட்சியில் வசிக்கத் தொடங்கினார். தனது கல்வியை ஹாட்லிக் கல்லூரியில் மேற்கொண்டார்.

தனது கல்வியை நிறைவு செய்ததும் ஆன்மிகத்தில் நாட்டம் கொண்ட அவர் இந்தியா சென்று அங்கு இராமகிருஸ்ண மிஷனில் தங்கி ஆன்மிகக் கல்வியை மேற்கொண்டார்.

பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய அவர் பருத்தித்துறையில் ஸ்ரீ இராமகிருஸண சாரதா சேவாச்சிரமத்தை நிறுவி தனது ஆன்மிகப் பயணத்தை தொடர்ந்தார்.

சேவாச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து வறிய மாணவர்கள் மற்றும் மக்களுக்கு பல்வேறு உதவிகளை மேற்கொண்ட சுவாமி சித்ரூபானந்தா அனைவரினதும் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் அவர் தனது அறப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று ஆச்சிரமத்தில் அன்னதான நிகழ்வை மேற்கொண்டதன் பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் சுவாமி தேகவியோகம் அடைந்தார்.

இவரது இறுதி நிகழ்வுகள் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ)

## மே-18இல் உறவு...

மான மனித உரிமை மீறலாகும்.

முள்ளிவாய்க்காலில் எமது தமிழ உறவுகள் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலிலும், துப்பாக்கிச் சூட்டிலும், சித்திரவதைகளிலும் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டார்கள். இந்நிலையில், கூட்டமாக அவர்களுக்கு அஞ்சலி செய்ய முடியாது என்று அரசும் அதன் படைகளும் தடைபோடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது காட்டுமிராண்டித்தனமானது.

அரசும்அதன்படைகளும்எந்தத்தடைகளைப் போட்டாலும் அதனைத் தகர்த்தெறிந்து முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் மரணித்த தமது உறவுகளை மே 18இல் தமிழ் மக்கள் நினைவு கூருவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(எ-8)

## தமிழகத்திலு...

பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களில் பிடிவிறாந்துகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது, இந்த தம்பதியர் தஞ்சம கோரி தமிழகத்திற்கு சென்றுள்ள செய்தி ஊடகங்களில படத்துடன் வெளியாகின. இதனைப் பார்த்த இந்தத் தம்பதியினரால் பாதிக்கப்பட்டவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மீண்டும் முறைப்பாடு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றின் ஊடாக தயாபரராஜா, உதய கலா தம்பதியினரை இன்டர்போலின் உதவியுடன் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

## தவறவிடப்பட்டது

மகேந்திரன் சுரேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.842031613V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் (N.P-P.S 2817) வாகனத்தின் இன்சூரன்ஸ் ரக்ஸ் ஆகியன தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் இந்த தொலைபேசி ஊடாக (0774254857) தொடர்பு கொண்டோ அல்லது இல.23, றக்கா றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பியோ உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## விபத்தில் சிக்கி...

வரே சிகிச்சைப் பலனின்றி நேற்று முற்பகல் 11 மணியளவில் உயிரிழந்துள்ளார்.


இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார்.பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-6)

## தடைக்கான ஆதா...

பது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைப் பொறுத்த வரையில் மிகவும் பாரதூரமான விவகாரம். இலங்கை அரசு வெளியிட்டுள்ள தடைப்பட்டியலை ஏற்பதற்கு தேவையான ஆதாரங்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

இலங்கை அரசு அதனை வெளிப்படுத்தினால் மட்டுமே நிலைமைகளை ஆராய முடியும். முடிவெடுக்க முடியும் என்றும் அவர தெரிவித்துள்ளார். (எ-8)

அரச துறை, தனியார் துறை
மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய
வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..
கோலாசிற்றி 021 320 2787
தொழில் வங்கி
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்



பொது நூலகப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள அலங்காரப் பொருட்கள்.

## 22 குடும்பங்களை வெளியேற்ற காலக்கெடு விதிப்பு!

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட தலைமன்னார் ஸ்டேசன் பகுதியில் வாழ்ந்து வரும் குடும்பங்களில் சுமார் 22 குடும்பங்களை எதிர்வரும் 14 தினங்களுக்குள் அப்பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என புகையிரத திணைக்கள அதிகாரிகளால்எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்விடத்தில், இவ்விடம் புகையிரத நிலையத்திற்கு சொந்தமானது என்றும் புகையிரத நிலைய நிர்வாகத்தினால் அறிவித்தல் பலகையும் நாட்டப்பட்டுள்ளது. அத்துடன் புகையிரத காணியில் அனுமதியில்லாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிக்கொள்ளுதல் எனும் தலைப்பில் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவ்விடத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தலைமன்னார் ஸ்டேசன் பகுதியில் புகையிரத நிலையத்திற்கு சொந்தமானது என கருதப்படும் குறித்த பகுதியில் சுமார் 40 தொடக்கம் 45 வருடாங்களுக்கு மேலாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த காணிகளுக்கான அனுமதிப் பத்திராங்களும் உள்ளது. குறித்த பகுதியில் உள்ள 22 வீடுகளில் பல வீடுகள் நிரந்தரமான வீடுகள், தற்காலிக கொட்டில்கள் சிலவற்றிலும் மக்கள் வாழ்கின்றனர்.

அப்பகுதியில் உள்ள மக்களுக்கு அரச சார்பற்ற அமைப்புக்களினால் ஏற்கெனவே வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் புகையிரத தலைமையகத்தினால் தலை மன்னார் ஸ்டேசன் கிராம அலுவலகர் ஊடாக கடந்த திங்கட்கிழமை முதல் குறித்த 22 பேருக்கும் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 40 தொடக்கம் 45 வருடாங்களுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக மக்கள் வாழ்ந்து வருகின்ற குறித்த காணியிலிருந்து எங்களை எழும்பிச் செல்லுமாறு கூறினால் நாங்கள் எங்கு செல்வது? என அந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

## இலங்கையர்...

பணிப்பாளர் ரிச்சர்ட் பெனர்ட் கூறியுள்ளார்.

ஆசிய நாடுகளில் சித்திரவதையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தமது பொறுப்பை பேச்சுடன் நிறுத்திவிடக் கூடாது எனவும் சர்வதேச ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவது முக்கியமானதே. ஆனால் அது மட்டும் போதுமானது அல்ல. அதை செயல் மூலமும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் "சித்திரவதையை நிறுத்து" எனும் பிரசார இயக்கத்தை ஆரம்பித்து வைத்த சந்தர்ப்பத்தில் அவர் கூறியுள்ளார்.

சீனா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான், இலங்கை, வியட்நாம் போன்ற நாடுகளில் ஒப்புதல் வாக்குமூலம் பெறவும், செயற்பாட்டாளர்களை செயற்பட விடாமல் தடுக்கவும், சித்திரவதை பயன்படுத்தப்படுகின்றது என இந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மியன்மார், நேபாளம் போன்ற நாடுகளில் சித்திரவதையில் இருந்து தப்பிக்கொள்ள கப்பம் கொடுக்க முடியாத ஏழைகளிடம் பணம் பெற்றுக்கொள்ள சித்திரவதை பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த 5 வருட காலத்தில் உலகில் குறைந்தபட்சம் 141 நாடுகளில் சித்திரவதையும் வேறு மோசமான வழிகளும் பயன்படுத்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

பல ஆசிய பசுபிக் நாடுகளில் சித்திரவதையின் பயன்பாடும் வேறு கொடூரமான மனித தன்மையற்ற அல்லது கேவலப்படுத்தும் தண்டனைகள் சாதாரணமானவை எனவும், அவை உயர்மட்ட குற்றச்செயல்களுக்கு உரிய தண்டனையே எனவும் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

ஐ.நாவில் 1984 ஆம் ஆண்டு சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு 30 வருடங்கள் கழிந்த பின்னரும் குறைந்தபட்சம் 23 ஆசிய பசுபிக் நாடுகளில் தற்போதும் சித்திரவதை இடம்பெறுகிறது என சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-6,8)

IIS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் :17-05-2014 காலை 10 மணி
தொடர்புகளுக்கு: 021 222 2831
No. 100
Clock Tower Road
Jaffna
TP: 021 222 2831
e-mail: iis@iis.lk
web: www.iis.edu.lk
AutoCAD
Accounting Package
Ethical Hacking
Tele Communication
Android Development
Visual Programming
(A/L) (O/L) GIT,ICT
Web Development
Java
MS Office
Multimedia
Desktop Publishing
(சி-7366)
Weekday Classes
Weekend Classes
Night Classes
"கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS இல் இணைவதன் மூலம்
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்"

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org